1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்கரவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு பங்குனி மாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 12-ம் இலக்சம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

இடையிடையே சிறுகமழைக்கோலம் காணப்படுகின்றது. பங்குனிவெயில் பகபகென எறிக்கின்றது. அதனால் தார்வீதிகளில் மக்கள் நடந்துகொள்ள முடியாது அனுபவிக்குங் கஷ்டமோ பகருந்தரமன்று.

### அடைக்கலமாதா கோவில்

யாழ்ப்பாணம், பரிசுத்தஅடைக்கல நாயகியின் ஆலயத்திலே தபசுகால ஞானவொடுக்கம் நாளை 25-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30மணிக்கு ஆரம்பமாகி அரும் வெள்ளியாகிய அடுத்தசித்திரை 1-ந்திகதி மாலை 6-30 மணிக்கு முடிவாகும்.

### ஆசனக்கோவில்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலையும், சுண்டிக்குளி சஞ்சுவாம் கோவிலையுஞ்சேர்ந்த ஆண் பாலாரின் தபசுகால ஞானவொடுக்கம் இம்மாதம் 27-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் ஆரம்பமாகி அடுத்தஞாயிற்றுக்கிழமை காலை முடிவாகும்.

### குருப்பட்டமும் கீழ்ப்பட்டமும்

றோமாபுரியிலே வேதசாஸ்திரங்கற்று வருகின்ற வண. சி. ஜி. அல்வினஸ்பிறதரும், வண. எம். பி இராயப்புபிறதரும் அடுத்த சித்திரைமாதம் 9-ந் திகதியன்று உபதியாக்கோன் பட்டமும், வைகாசிமாதம் 8-ந்திகதியன்று தியாக்கோன் பட்டமும், ஆடிமாதம் 10-ந்திகதியன்று குருப்பட்டமும் பெறவிருக்கிறார்களென அறிகின்றோம்.

### கோடிக்கரைத் துறைமுகம்

கோடிக்கரைத் துறைமுகம் காங்கேசன்துறைக்கு மிகவும்அணித்தாய் இருப்பதாலும், காங்கேசன் துறைமுகத்தை வளப்படுத்த அது மிகஉதவியாய் இருக்குமாதலாலும் திருப்புளாணிக்குப்பதிலாகக் கோடிக்கரையையே திறக்கும்படி இந்தியஅரசாங்கத்தைத் தூண்டுமாறு இலங்கைப்பாதுகாப்பு-வெளிவிவகார மந்திரியாரைக் கேட்டுக் கொள்வதெனக் காங்கேசன்துறைப் பட்டினசங்கத்தலைவர் சென்றவெள்ளிக்கிழமை அச்சங்கத்தின் மாதாந்தகூட்டத்தில்தெரிவித்திருக்கின்றார். மேலும் இப்பொழுது நிலைமைசாதகமாகவிருப்பதால் துறைமுகத்தை வளப்படுத்தும் வேலையைத் தாமதமின்றியே தொடங்கும்படியாக அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதெனப் பட்டினசங்கம் தீர்மானித்திருக்கிறது.

### முத்துச்சம்பா அரிசி

அரசாங்கம் கூட்டுறவுப் பண்டகசாலைகள்மூலம் தற்போதுநடத்திவரும் முத்துச்சம்பாஅரிசி விற்பனவாலே நூற்றுக்குநூறுவீதம் ஆதாயமடைந்துவருவதாகச் சொல்லப்படுகிறது. அது பிஸ்தாபம்பெற்ற இந்தஅரிசியைத் தென்னிந்தியாவிலிருந்து படி ஒன்று 45 சதம்வரை விலைகொடுத்து வாங்கிச் சனங்களுக்குப் படிஒன்று 90 சதமாக விற்றுவருகிறது. படி ஒன்று 45 சதம்வரையிலே - பங்கிட்டரிசியாகிய கூப்பன் அரிசியிலும் 10 சதமகுறைந்தவிலையிலே முதற்தரமும், இரண்டாந்தரமுமான முத்துச்சம்பா அரிசியைப் பெருந்தொகையாகஉதவ வியாபாரிகள் முன்வந்திருப்பதாகவும், பங்கிட்டரிசியின் பெறுமதியிலும் குறைந்தவிலையிலே தாய்லாந்திலிருந்து 13,000 தொன்அரிசியும், பாகிஸ்தானிலிருந்து 49,000 தொன் அரிசியும், தென்னிந்தியாவிலிருந்து 17,550 தொன்அரிசியும் சமீபத்தில் வாங்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### கன்னியாஸ்திரீமாரின் தியாகசேவை

கொழும்பிலே சென்பிறிட்ஜெற் கன்னிகாமடத்து ஆங்கிலகலாசாலைப் பரிசளிப்புவிழா சென்றசனிக்கிழமை பிற்பகல் பரிமளிப்பாக நடந்தேறியது. அதற்குச் சனப்பிரதிநிதிகள்சபையின் சபாநாயகரான சேர்அல்பிறெட் பீரிஸ் அவர்கள் தலைமைவகித்துப் பேசிய போது கூறியதுவருமாறு: "எமது நாட்டின் நலனுக்காக உசிதமான ஓர் பணியாற்றிவருகின்ற கன்னியாஸ்திரீமாரின் உத்தமதொண்டானது இந்நாட்டிலுள்ள சிலபேர்களால் கண்டனத்துக்குரிய ஓர் காரியமாய் இருந்துவருவது அதிகந்துரதிர்ஷ்டவசமாகும். கன்னியாஸ்திரீமார் எமது நாட்டில் தொண்டாற்றுதற்காகத் தங்கள்சுயநாடுகளைத் துறந்து, ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்துவந்தார்கள். ஒரு தொகையான வருடங்களாக அவர்கள் தங்கள்சுயநாடு சென்றதேயில்லை. கன்னியாஸ்திரீமாரைக் கண்டனஞ் செய்ததற்குப்பதில் கல்விவளர்ச்சிக்கும், தாங்கள் கல்வியிற்றப் பிரயாசையெடுக்கின்ற இளைஞர்களுக்குமாக அவர்கள் எடுத்துக்கொள்ளும் சுயநலமற்ற சிரத்தையையிட்டு மக்கள்அவர்களுக்கு நன்றிபாராட்டவேண்டும்."

### தங்க இறக்குமதி

இந்தவருடத்திலே 12,000 அவுண்ஸ் தங்கத்தை இறக்குமதிசெய்யும்படி உள்நாட்டுமந்திரி காரியாலயம் மத்திய வங்கியைக் கேட்டிருக்கிறது. சென்ற வருடம் இறக்குமதிசெய்யாது விடப்பட்ட 6,000 அவுண்ஸ் தங்கத்துடன் இவ்வருடம் மொத்தமாகப் 18,000 அவுண்ஸ்தங்கம் இறக்குமதிசெய்யப்படும்.

### இந்திய விதைவெங்காயம்

அறுவடைகாலத்தின்போது மழைபெய்தகாரணமாக யாழ்ப்பாணத்தில் வெங்காயவிளைவு பாதிக்கப்பட்டமையாலே விதைவெங்காயத்துக்குத் தட்டுப்பாடுஏற்பட்டுள்ளது. உள்நாட்டிலுள்ள கையிருப்பிலிருந்து அதைப் பெறுவதற்கென்று உணவுஉற்பத்திப் பகுதி முயற்சித்தும் போதியவிதை வெங்காயம் கிடைக்கவில்லை. அதனால் தென்னிந்தியாவிலிருந்து உயர்தரமான 400 தொன் விதைவெங்காயம்வாங்கி வெங்காயம் உற்பத்திசெய்வாருக்கு உதவ உணவுமந்திரி காரியாலயம் தீர்மானித்திருக்கிறது.

### சென்னைக்கவர்னரின் விஜயம்

சென்னைக்கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் சென்றவெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம்வந்துசேர்ந்து, மூன்றுதினங்கள்வரை இங்குள்ள பிரதானஇடங்கள் பலவற்றையும் தரிசித்துப் பல்வேறிடங்களிலும் சிறந்தவரவேற்புகள் அளிக்கப்பெற்றுச் சென்ற திங்கட்கிழமைகாலை இங்கிருந்து விமானமூலம் சென்னைக்குப் பயணமாயினர். சென்றஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாண நகரமண்டபத்திலே நகர்வாசிகள்போரால் மேயராலும், நகரசபை அங்கத்தவர்களாலும் அவருக்கு ஓர்வரவேற்பு அளிக்கப்படலாயிற்று. அவ்வேளை நகரமண்டபங்கொள்ளாது அநேகபிரபலஸ்தர்கள்உட்படப் பெருந்தொகையானோர் தேங்கியிருந்தார்கள். மேயர்அவர்கள் தலைமைவகித்து ஆங்கிலத்திலும், தமிழிலும் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்தனர். அவ்வேளை கவர்னர் அவர்கள் ஒரு மணித்தியாலம்வரை பேசியவிடத்து: யாழ்ப்பாண நூல் நிலைய இயக்கவிஷயமாய்ப் பலசம்பவங்களையும் எடுத்துக்கூறினர். யாழ்ப்பாணநகர் முழுவதுக்கும் குழாய்மூலம் நல்லதண்ணீர உதவ வேண்டியதன் அவசியத்தைப்பற்றி முக்கியமாகக் குறிப்பிட்டார். அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் பிரவேசிக்குமுன் நகரசபைவேலைகளில் பயிற்சிபெற்றுத் தங்கள்நகருக்குச் சேவைசெய்ய வேண்டுமென வற்புறுத்திப்பேசினர். யாழ்ப்பாணமத்திய நூல்நிலையத்துக்குத் தாம்ஆயிரம்ரூபா நன்கொடையளிப்பதாக வாக்குறுதியளித்தார்.

### சங்கு ஏற்றுமதி

அரசாங்கம் சங்குத்தீர்வையைக் கூட்டியதாலும், இந்தியஅரசாங்கம் இலங்கைச்சங்கின் இறக்குமதியைத் தடைசெய்ததாலும் தீவுப்பகுதியில் பெருந்தொகையான சங்குகள் தேங்கிக்கிடந்தன. தற்செயலாக இந்தச் சங்குகளைப் பாகிஸ்தான்வாங்க முன்வந்துள்ளது. அதனால்சங்குகளை ஏற்றுமதிசெய்யமுடியாது இவ்வளவுகாலமும் கஷ்டப்பட்ட சங்கு வியாபாரிகளின் சஞ்சலமும்நீங்கியது. ஊர்காவற்றுறைச்சங்குமாலில் தேங்கிக்கிடந்த 700 மூடைசங்குகளும் வத்தைகள்மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுமெனத் தெரியவருகிறது.

### வேலைநிறுத்தம் நின்றது

கொழும்பிலே சவுத் வெஸ்ற்றேன் பஸ்கம்பெனி வேலை கடைசியாகத் தளர்ந்துசோர்ந்து நின்றுவிட்டது. அதனைத்தூண்டி நடத்தியவர்களும் ஆற்ருது அதைநிறுத்தி விட்டார்கள். இந்த வேலைநிறுத்தத்தின் விளைவாய் பஸ்ஒன்றில் சதிமானமாக வைக்கப்பட்ட வெடிகுண்டு ஒன்றுவெடித்துப் பலர்காயமடைந்தனர். இதிலிருந்து பெருந்தொகையான வெடிகுண்டுகள், வெடிமருந்துகளையும், இவைகளை ஆங்காங்குகொண்டுபோய்உதவிக்கொண்டுவந்தவாடகைக்காரரையும், அதன்சாரதியையும் பொலிசார் கைப்பற்றியிருக்கின்றனர்.

## பொதுவர்த்தமானம்

### தூத்துக்குடி முத்துச்சலாபம்

தூத்துக்குடியிலே முத்துக்குளிக்கும்வேலை சென்றஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது. இம்முறைஏறக்குறைய 2 கோடியே 70 லட்சம்சிப்பிகள் குளிக்கலாமென மதிப்பிடப்படுகிறது. 45 தினங்களாக நடைபெறவிருக்கும் இந்தமுத்துச்சலாபத்தில் ஏறக்குறைய 400 நாட்டுப்படகுகளுடன் ஆயிரம்சுளியோடிகள் ஈடுபடுவார்கள். இற்றைக்குச்சுமார் முப்பது வருடங்களின்முன் அங்கு நடத்தப்பட்ட முத்துச்சலாபத்தால் சென்னை அரசாங்கத்துக்குப் பத்துலட்சம்ரூபாவரை இலாபம்கிடைத்தது. "எகிப்தியஎழிலரசி கிளியோபாத்ரியாவின் அழகிற்கு அணிகலனாய்விளங்கிய முத்துக்களில் பெரும்பான்மையின தென்னிந்திய கரையோரத்தில் குளிக்கப்பட்டவையே" என்று சென்னைஇராச்சியமந்திரி திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் முத்துச்சலாப ஆரம்பத்தின் போது கூறலாயினர்.

### வெளியேற்றப்பட்ட மந்திரி

வீதிகள், சந்தைகள், பஸ்நிலையங்கள், றெயில்வேஸ்ரேஷன்கள் இன்னும்எங்கு பார்த்தாலும் வெற்றிலைபாக்குத் துப்பலாலேஏற்பட்டுள்ள அரோசிகநிலையைப் பார்க்குங்கால், பாமரமக்களே இவ்வாறு வெற்றிலைபாக்குக் குதப்புகின்றனர்என்று எவருங்கருதுவர். ஆனால், ஒருமந்திரி சட்டசபையில் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே பேசினரென்னில் வேறென்ன சொல்லக்கிடக்கின்றது! காஷ்மீர் சபையில் இம்மாதம் 12-ந்தேதியன்று கேள்விநேரத்தின் போது உதவிஅபிவிருத்தி மந்திரி திரு. அஸதுல்லா மீர் தமதுவாயில் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே பதில் அளித்ததால் சபாநாயகர் அவரைச் சபையைவிட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டார். உடனேமந்திரி வெளியேசென்று வெற்றிலைபாக்கைத்துப்பி, வாயைக்கொப்பளித்துவிட்டுச் சபைக்குத்திரும்பிவந்தார்.

### படகில்விழுந்த பாம்பு

சமீபத்திலே கோலாலம்பூரில் பாய்ந்துவந்த ஆற்றுவெள்ளத்திலிருந்து தப்பிய ஓர்படகுநிறைய ஏறிஅக்கரை சென்றுகொண்டிருந்த மக்களுக்கு மற்றோர்அபாயம் திடீரெனவந்து சூழ்ந்துகொண்டது. ஒருமரத்திலிருந்து பெரிய நாகபாம்புஒன்று தொப்பென அப்படகில்விழுந்ததுதான் சீறிப்படமெடுத்து ஆடத்தொடங்கியது. அப்போது படகில்சென்றவர்கள் பட்டபாட்டைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமா? ஒருகணம் தாமதித்திருந்தால் படகேகவிழ்ந்திருக்கும். பாம்பென்றால் படையேநடுங்கும்பொழுது படகுகவிழக் கேட்கவாவேண்டும்? ஆனால், படமெடுத்து ஆடியபாம்பு ஒருகணத்துக்கு மேல் படகில்இருக்கவில்லை. வீரன்ஒருவன் சீறிக்கொண்டிருந்த நாகத்தின் கழுத்தைப் பிடித்துநெரித்து வெள்ளத்தில் தூக்கியெறிந்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமிகு வன்னிநாடு

(சென்றவாரத் தொடர்ச்சி)

அவர்கள்கொடுத்த பாதவச்சேனையுடனும், சிலபோர்த்துக்கேயருடனும் அவ்வன்னியன் திருக்கோணமலைக்கு வந்து, தான்எண்ணியவாறு முடியாமைகண்டு பாதவச்சேனையுடன் வன்னியகுமாரனைக் கோடிக்கரைக்குப் போர்த்துக்கேயரிடம் அனுப்பினன். அங்கிருந்து அவ்வன்னியகுமாரனைப் போர்த்துக்கேயர் கோவைக்கனுப்பி அப்பொன்சோஎன்னும் நாமத்துடன் கிறிஸ்தவனுக்கி அங்கேயுள்ள கல்விக்கழகத்திற் கல்விபயிற்றுவித்து, ஒருசமயம் தாம் யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்டால், அவ்வன்னியனே அங்கே அரசனுக்குவதாக அவனுக்கு நயவசனங்கூறித் தம்மிடத்திலேயே வைத்திருந்தார்கள். அக்குமாரனின் பரிபாலகனுன மேலேகூறிய வன்னியனேச் செகராசசேகரன் திருக்கோணமலைக்கு வன்னிய சிற்றரசனுகஇருத்தித் தனக்கடங்கி நடக்கும்படி நியமித்தான்.

## வன்னிநாடு

வன்னியர்ஆண்டபகுதி வன்னிநாடு எனப்பட்டது. இக்காலத்தில் வனவிலங்குகள்வதியும் காடுகளாகக் காட்சியளிக்கும்நிலம் பண்டைக்காலத்தில் செந்நெற்கழனிகளாகச் சிறந்துவிளங்கியது. பச்சைக்கம்பளம் விரித்தாற்போலச் செஞ்சாலி செழித்துவளர்ந்தது. வன்னிநாட்டில்மட்டும் ஏறக்குறைய 600 குளங்கள் இருந்தன எனச் சரித்திராசிரியர்ஒருவர் குறிப்பிட்டுள்ளார். கழனிகளுக்கு இடையில்இருந்த இக்குளங்களினுல் நீர்ப்பாய்ச்சப்பட்ட இந்நிலப்பரப்பு நல்லவிளைவைக் கொடுத்தது. அதனுல்வன்னியர் ஐசுவரியம்பெற்றுச் செருக்குற்று வடஇலங்கையைஆண்ட ஆரியச்சக்கிரவர்த்திகளுடனும், சிலவேளை சிங்களமன்னர்களுடனும் போர்புரியத் தலைப்பட்டனர். போர்த்துக்கீசர் ஆட்சிக்காலம்வரை வன்னியர் சிற்றரசர்களாகவே இருந்தனர். ஒல்லாந்தர் ஆண்டகாலத்தில் வன்னியர் தங்களுக்கு ஆண்டுதோறும் யானைகள் திறையாகஅளிக்கவேண்டுமென விதித்தனர். ஆனுல், வன்னியர் பலகாலும் திறைகொடுப்பதிற் சுணக்கமாகி, ஒல்லாந்தரைத் தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தனர். கண்டியரசன்பக்கமாக வன்னியர் திரும்பிவிட்டால் தங்களுக்கு ஆபத்துஏற்பட்டுவிடுமெனப் பயந்தஒல்லாந்தர் வன்னியரைக் கௌரவமாகவே நடத்திவந்தனர். வன்னியரின்அடங்காத் தன்மையைப்பற்றி ஒல்லாந்த கொம்மந்தோர்மாரின் அறிக்கைப்பத்திரங்களில் பலகுறிப்புகள் காணப்படுகின்றன. ஹென்றிக் சுவாடக் குறூன் எனும் ஒல்லாந்த கொம்மந்தோர் (1694-97) எழுதியிருப்பதாவது: "இவ்வன்னியர்கள் கம்பெனியின்பிரசைகளாகப் பிறந்திருப்பினும், சாதியில் நடபடியான வேளாளரேயானுலும், காலகதியிலே மிகவும் செருக்குற்றேராய் வன்னியன்எனும் தங்கள்பட்டம் ஏதோபயங்கரமும், முக்கியமுமானபட்டமென எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இப்பட்டத்தை அவர்கள் கம்பெனியிலிருந்தே பெற்றுக்கொண்டபோதிலும் கம்பெனியையாவது, அதன் மேலுத்தியோகத்தர்களையாவது கௌரவிக்க வேண்டுமேயென்று சிறிதும் கருதுகின்றுரில்லை. உத்தியோகத்தரின் முன்வந்து செய்யவேண்டிய மரியாதையையும் மறந்துபோகிறுர்கள்." ஒல்லாந்தர்காலத்தில் டொன்பிலிப்பு நல்லமாப்பாணன் (பனங்காமம்), டொன்கஸ்பார் கவுசயினுர் (பறையனுலங்குளம்), இலங்கை நாராயணன் (புதுக்குடியிருப்பு), டொன்தியோகு புவிநல்லமாப்பாணன் (கரிக்கட்டுமூலை), பெரியமெயினுர் (முள்ளியவளை), அம்பலவன்னியன் (கருநாவல்பற்று), சேதுகாவல வன்னியன் (தென்னமரவாடி), டொன்கஸ்பார் நிச்செயசேதிராயன் (பூநகரி யானைவேட்டைத் தலைவன்.—இவன் நல்லமாப்பாணன் மகன்) முதலியவன்னியர்கள் ஆட்சிபுரிந்தனர்.

## நல்லமாப்பாண வன்னியன்

வன்னிநாட்டினை ஆட்சிபுரிந்த வன்னியனுர்களுள்பனங்காமத்துஅயுதாந்தி வன்னியம் தொஞ்சுவாம் குலசேகர, நல்லமாப்பாண வன்னியனுர் தலைசிறந்த சிற்றரசராகக் காணப்படுகின்றுர்.

இவர் தமதுபிரிவில் மக்களுக்குத் தண்டனை விதிக்கவும், பட்டங்கள்அளிக்கவும் அதிகாரமுடையவராக இருந்தார். 1781–இல், விளாங்குளம் சாதிவெள்ளாளன் ஆள்வயினுர் கந்தஉடையாருக்கு முதலிப்பட்டமும், பலசங்கைவரிசைகளும் அளித்திருக்கிறுர் என்பதைச் சுவாமி ஞானப்பிரகாசர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தவன்னியனுர்களை டச்சுத் தேசாதிபதிகள் தமது மாளிகைக்கு அழைப்பதானுல், தங்களுக்குச்சேவைசெய்யும் மேளகாரரை அனுப்பிக் கௌரவமாக அழைத்துவரச் செய்தார்கள். 1697-இல் இலங்கைத்தேசாதிபதி கெறிற் டி ஹீர் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்து, அங்கேநல்லூரில் நடத்தியதர்பாருக்கு (கொலு) வன்னியனுர்கள் சமுகமளிக்க மறுத்துவிட்டனர். இதற்குக்காரணம் தேசாதிபதியின் மேளகாரர் வழக்கம்போல அவர்களை அழைத்துவரச் செல்லவில்லையென்பதே. ஆகவே, டச்சுக்காரரின் ஆட்சிகாலத்திலும் தங்கள்கௌரவத்தைக் கைவிடாமல் நடந்துவந்தவர்கள் வன்னிப்பிரதானிகள் என்பதற்கையமில்லை.

## பண்டார வன்னியன்

இலங்கையை வெற்றிகொண்ட போர்த்துக்கீசர், டச்சுக்காரர், ஆங்கிலர்எனும் அந்நியர்க்கு இலங்கையிலே வன்னிநாடுகொடுத்த தொந்தாவைப்போல வேறுஎந்த மாகாணமாவது கொடுக்கவில்லை. ஆகவே, ஏறக்குறைய 200 ஆண்டுவரை வன்னிநாட்டுத்தலைவர்கள் அந்நியர் ஆட்சியை ஒதுக்கிவிடவும், சுதந்திரமாகவாழவுமே கங்கணங்கட்டினர். பனங்காமத்தில் ஆட்சிபுரிந்த எலிசபெத் கதறீன் நல்லநாய்ச்சியார் (மேரிசெம்பாத்தை) டச்சுக்காரருக்கு அடிபணியாமல் இறுதிவரை போர்புரிந்து, ஈற்றில் டச்சுக்காரர் அந்தவீரப்பெண்மணியைச் சிறைப்பிடித்துக் கொழும்பில் பாதுகாப்பில் வைத்திருந்தனர். டச்சுக்காரர் வன்னிநாட்டை அடக்கிபாளும்படி லெவ்ரினன்ற் நகல்என்பவனுக்குச் சர்வாதிகாரம்கொடுத்து அவனை வன்னிநாட்டுக்கு ஒருபடையுடன் அனுப்பினர். இவன் முல்லைத்தீவில் ஒரு கோட்டைகட்டி, அங்கிருந்து பரிபாலனஞ்செய்துவந்தான். வன்னிநாட்டின் கடைசிவீரபுருஷனுக விளங்கியவன் நுவரகளாவிகுலசேகரவயிரமுத்துவன்னியகுமாரபண்டாரன். இவனைத்தமிழர்கள் பண்டாரவன்னியன் எனப்பொதுவாக அழைத்தனர். இவன் டச்சுக்காரருக்கும், ஆங்கிலேயருக்கும விளைத்தஇன்னல்களோ சொல்லமுடியாது. இவன் உயிரோடிருக்கும்வரை தங்கள் ஆட்சிநிலைத்திராதென அவர்கள்கருதினுர்கள்.

கி. பி. 1803-இல்ஆங்கிலேயருக்கும், கண்டியரசனுக்கும் போர்நிகழ்ந்தபோது, பண்டாரவன்னியன் ஆங்கிலேயரை இலங்கையில்நின்று தொலைத்துப்போடுவதாகச் சபதங்கூறிக் கொட்டியாரத்தையும், முல்லைத்தீவையும் பிடித்தான். பின்னர் இவனுடையபடையும், கப்ரின் வொன்டிறிபேக் என்பவன் தலைமையில்நின்ற ஆங்கிலப்படையும்பொருதி, அப்போரில் பண்டாரவன்னியன்படை தோல்வியுற்றது. ஆனுல், பண்டாரவன்னியன் தப்பியோடிவிட்டான். 1809-இல் பண்டாரவன்னியன் மீண்டும் கலகம்விளைக்கத் தொடங்கினுன். 1811-ம்ஆண்டு மாசிமாதம் அவன்மீண்டும் வன்னி ஆதிக்கத்தைப் பெற்றுவிட்டான்.

ஆனுல், ஆங்கிலேயர் பெரும்படைசேகரித்து வைத்திருந்தபடியால் பண்டாரவன்னியன்படை தாக்கிவெற்றிபெறமுடியவில்லை. கிழக்குமுதல் தெற்குவரைசென்று பின்னர்உடையார்ஊரில் நடந்தபோரில் பண்டாரவன்னியன் படுகாயப்பட்டான். அவனுடைய வீரர்கள் அவனைப் பனங்காமத்துக்குத் தூக்கிச்சென்றனர். அடுத்தநாள் அவன் இறந்துவிட்டான். அவனோடு வன்னியாட்சியும் இல்லாதுவிட்டது.

(வளரும்.)

# "ஒன்று சேர்ந்து செபிக்கும் குடும்பம் ஒன்றித்து வாழும்"

## வண. பெய்ற்றன் சுவாமியவர்களின் சுபசெய்தி

குருப்பட்டம்பெற்ற சிலநாட்களில் நான்ஆரம்பித்த நன்முயற்சியை உங்களுக்குக் கொண்டுவரக்கிடைத்த பாக்கியத்துக்காகச் சந்தோஷப்படுவதோடு, தேவனுக்கும் நன்றியுள்ளவராக இருக்கிறேன்.

என்ஆத்துமசரீர முழுவல்லமை எல்லாம்கொண்டு நான்முயற்சிப்பது என்னவெனில், ஒருநாளினுள்ள 24 மணிநேரத்திலேஒரு 10 நிமிஷம்ஒவ்வொரு குடும்பமும்—அதாவது கணவனும், மனைவியும், பிள்ளைகளும் ஒன்றுசேர்ந்து, முழந்தாளில்இருந்து, பிதாவைநோக்கி, அன்புள்ள தகப்பனே! எங்களுக்குத் தேவரீர்கொடுத்துள்ள உணவுக்காகவும், உடைக்காகவும், இந்த வீட்டுக்காகவும், மற்றெல்லாவற்றிற்காகவும், இரவும்பகலும் எங்கள்குடும்பத்தைக் காப்பாற்றிவரும் கருணைக்காகவும் தேவரீருக்கு நன்றியறிதல் தெரிவிக்க இதோ கூடியிருக்கிறேம்; எல்லாவற்றையும்விட மேலானவல்லமையுள்ள குடும்பசெபமாகிய செபமாலையைச் செபிக்கிறேம்என்று சொல்லச் செய்வதற்கேயாம்.

இதுதான் என்வேலை. இதுதான் என்கடமை. குடும்பசெபமாலைக்கு உரியஇடமாகிய குடும்பத்திலே, அதைப்பழக்கத்தில் கொண்டுவருவதற்குப் பாடுபடாத—தங்கள்உயிரைமுதலாய்க் கொடுக்கவிரும்பாத குருமாரும் உண்டோ? இல்லவேஇல்லை. தேவனுல்கொடுக்கப்பட்ட ஒவ்வொருவினுடியையும், ஒவ்வொரு நிமிஷத்தையும் இந்தக் குடும்பசெபமாலைப் பக்தியைப் பரப்புவதற்காகச் செலவிடவேண்டிய விசேடகடமை எனக்கிருக்கிறது.

அதாவது, நான்வியாதியாய் இருந்தபோது என்னைப்பார்க்கவந்தோர் தங்கள் அநுதாபத்தைக் காட்டினுர்கள். அநுகூலமான வார்த்தைகளைப் பேசினுர்கள். ஆனுல், என்னைக்கைதூக்கி, எழுந்துநடவென்று சொல்லவோ, உடம்பிற்பலத்தை உண்டுபண்ணுகிறேமென்று கூறவோ அவர்களால்முடியாமல் இருந்தது. ஆனுல், நமதுகண்களுக்கு மறைந்திருக்கும பரிசுத்தகன்னிகையாகிய தேவதாயார் எனதுவிண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தார். என் வியாதியைக் குணப்படுத்தினுர். இன்று உங்கள்முன்நிற்கக் கருணைகூர்ந்தார். இக்கருணைக்குக் கைமமாருகத்தான் எங்கள்தாயைப்புகழும் செபமாகிய குடும்பசெபமாலைப் பக்தியைப்பரப்ப உலகமெலலாம் சுற்றிவருகிறேன்.

குடும்பசெபமாலை செபிப்பதால் என்னநன்மை? அதில்ஏன் அதிகசிரமம் எடுக்க வேண்டும்? என்று சிலர் கேட்கக்கூடும். விசுவாசமுள்ள கத்தோலிக்கஆடவனே, குழந்தைகளின் தந்தையோ, குடும்பத்தின் தலைவனே, அல்லதுவிசுவாசமுள்ள கத்தோலிக்க பெண்ணே, மாசற்றஇருதயமுள்ள மக்களைப்பெறும் மாதாவோ இக்கேள்விகளைக் கேட்கவேண்டிய அவசியமே இல்லை. குடும்பசெபமாலையானது குடும்பத்தின்உணவும், குடிக்கும்நீரும், சுவாசிக்கும்காற்றுமாய் இருக்கிறது.

ஒருவீட்டில் பலநாள் உணவுசமைக்காவிட்டால் அங்கே பசிஉண்டாகின்றது. அதனுல்வருந்துகின்ற பிள்ளைகள் அழுது தங்கள்தாய்முகம் பார்க்கிறுர்கள். தாய் கணவன்முகம்பார்த்துக் கஷ்டத்தைக்கூறுகிறுள். கணவன் வெளியேபுறப்படுகிறுன். பலமணித்தியாலம் கஷ்டப்பட்டு உழைக்கிறுன். கையில்கிடைத்ததைத் தனமனைவியிடம் கொண்டுவந்துகொடுத்துப் பசிக்குறையை நீக்குகிறுன்.

இவ்வாறு குடும்பசெபமாலை செபியாத குழந்தைகள் உள்ளவீட்டிலே ஆத்துமபசி உண்டாகிறது. அதனுல் ஏற்படுவதுதான் குறும்புத்தனம், கீழ்ப்படியாமை, முரட்டுச்சுபாவம், தேவபயமின்மை. இதைக்கண்டும் தந்தைதாய்மார் பிள்ளைகளின்போக்கில் அவர்களை விட்டுவிடுகிறுர்கள். இதன்காரணம் என்ன? இக்குறையைநீக்க நாம் என்னசெய்யவேணடும்? என்று சிந்திக்கிறுர்கள்இல்லை. உணவுப்பசியால் வருந்தும்பிள்ளைகளின் குறையைநீக்கப் பலமணித்தியாலம் பாடுபட்டுழைக்கும் தகப்பன், பரிதாபம்பார்க்கும தாய் பத்துநிமிஷநேரம் செலவழித்துப் பிள்ளைகளோடுகூடிக் குடும்பசெபமாலை செபித்து ஆத்துமபசிக்குறையைநீக்க முயற்சியாதுவிடுவது எத்துணை மதியீனம்! எவ்வளவுஅசட்டைத்தனம்!

கீழ்ப்படியாமையால் சமாதானமின்றிச் சண்டைபிடித்து வாழ்க்கையே கசந்து வாழ்வுநடத்தும் குடும்பங்கள் விரும்புவனஎவை? கீழ்ப்படிதல், சமாதானம், சந்தோஷசீவியம் அல்லவா? இவைகளை அடைய நாம் என்னசெய்யவேண்டும்? தினமுந்தவருது இரவில் 10 நிமிஷநேரம் ஒன்றுகூடிச் செபமாலைசெபிக்கவேண்டும். இதைப்பழக்கத்தில் கொண்டுவரும் குடும்பங்களில் கீழ்ப்படிதல், சமாதானம், சந்தோஷம் தானுகவந்துசேரும்.

உத்தம தேவசிநேகம், அடக்கம் பொருந்திய பிள்ளைகள் சிலகுடும்பங்களிலும், தேவபயமற்ற—அடக்கமில்லாத பிள்ளைகள் சிலகுடும்பங்களிலும் தோன்றுவதன்காரணம, தாய்தந்தையர்களே. தேவபயம், அடக்கஒடுக்கமுள்ள தாய்தந்தையர்களால் வளர்க்கப்படும்பிள்ளைகள அவர்களின் முன்மாதிரிகையினுல் உத்தமபிள்ளைகளாகவும், துர்மாதிரிகைகாட்டும் தாய்தந்தையர்களால் வளர்க்கப்படும்பிள்ளைகள் துஷ்டப்பிள்ளைகளாய்த் தேவனுக்கும், உலகத்துக்கும், ஏன்பெற்றோருக்குமே உதவாதவர்களாயும் ஆகிவிடுகிறுர்கள்.

குடும்பத்தில் ஒவ்வோர்நாளும் சொல்லப்படும் குடும்பசெபமாலையானது, சிறுவர்களின் மாசற்றஇளம் உள்ளங்களில் விசுவாசத்தையும், தேவபயத்தையும், கீழ்ப்படிதலையும் கல்லில் எழுதிய எழுத்துப்போல் அழியாமல் பதித்துவிடுகிறதென்பது கண்கண்ட உண்மை. காலாகாலமாக உலகம் கண்டுவரும் மற்றொருஉண்மை என்னவென்றுல், குடும்பசெபமாலை செபிக்கும்குடும்பங்களிலிருந்தே உத்தமகுருமாரும், கன்னியாஸ்திரீகளும், நல்லகணவன் மனைவிகளும், தாய்தந்தையர்களும் தோன்றுகின்றனர் என்பது.

குடும்பசெபமாலையென்றுல் ஓர் குடும்பத்திலிருக்கும் எல்லோரும், அல்லது அன்றுசேரக்கூடியவர்கள் எல்லோரும் ஒன்றுகூடியிருந்து செபமாலைசெபிப்பது. இருவர் மாத்திரமிருந்து செபமாலைசெபித்தாலும், அதுவும் குடும்பசெபமாலை ஆகிறது. "எங்கே இரண்டுமூன்றுபேர் என் நாமத்தினுல் கூடியிருக்கிறுர்களோ அங்கே அவர்கள்மத்தியிலே நானும் கூடஇருக்கிறேன்" என்ற தேவவாக்கு இவர்களில் நிறைவேறுகின்றது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### றூவான்நகர் ஆசனக்கோவில்

பிரான்ஸ்தேசத்திலே ஆகாய விமானப் படையெடுப்புகளின் போது சேதமுற்றுத் தற்போது புனருத்தாரணஞ் செய்யப்பட்டு வரும் புராதனப் பெருமை வாய்ந்த றூவான்நகர் ஆசனக் கோவிலானது அடுத்தவருடம் — அதாவது ஜோன் அவ் ஆர்க் என அறியப்படுகின்ற அர்ச். ஆர்க்கின் அருளம்மாள் அந்நகரிலே திரும்பவும் விசாரணை செய்து நிரபராதியாகக் கண்டு கொள்ளப்பட்ட ஐந்தாம் நூற்றாண்டுநிறைவாகிய அடுத்தவருடம் திரும்பவும் திறந்துவைக்கப் படவிருக்கிறது. இந்த ஆசனக் கோவிலிலிருந்து கல்லொன்று பெயர்க்கப்பட்டு நியூயோர்க்நகரிலுள்ள ஐடின்வில்ட் ஆகாயத் துறைமுகத்தில் "ஆகாயங்களின் நாயகி" யான மரியன்னை பேரால் கட்டப்படவிருக்கும் சிற்றாலயத்தில் சேர்த்துக்கட்டுமாறு அமெரிக்கஐக்கியதேசத்துக்கு அனுப்பப்படவிருக்கிறது.

### மனந்திரும்பிய கோறியதலைவர்

கோறியநாட்டின் முன்னாள் உபஜனாதிபதியும், சமீபத்திலே சவூல்நகரில காலஞ்சென்றவருமான திரு. கிம்-சங்-சூ அவர்கள் தாம் மரிப்பதற்கு இருமணித்தியாலங்களின்முன் ஞானஸ்நானம்பெற்று ஓர்கத்தோலிக்கராக மரணிக்கலாயினர். முன்னர் அமெரிக்க அரசாங்கத்திடமாகக் கோறியாவின் ஸ்தானீகராயிருந்த திரு. ஜோண் சாங் அவர்கள் கத்தோலிக்க திருமறையைப்பற்றிச் செய்த வியாக்கியானங்களைக் கேட்டது முதல் இவர் அதில் கரிசனையெடுக்கத்தொடங்கினார். இவர் ஓர்பிரபல வர்த்தகர். கோறிய சர்வகலாசாலையையும், சவூல்நகரிலே ஆண்களுக்கென மத்திய உயர்தர கலாசாலையையும், "ஒறியென்ரல் டெய்லி நியூஸ்" எனும் பத்திரிகையையும் அடியிட்டவர் இவரே.

### திருமுடி சூடிய தினம்

பரிசுத்தபாப்பரசர் திருமுடி சூடிய 16-ம்ஆண்டுநிறைவுதினம் இம்மாதம் 12-ந் திகதி சனிக்கிழமைவந்தபோது, உலகின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக்கணக்கிலே அவருக்கு அனுப்பிவைக்கப்பெற்ற சோபனதந்திகள், கடிதங்களின் தொகையோ முன்னர் எந்த வருடத்திலும் இல்லாதவகையில் அத்துணை மிகப்பெரிதாய் இருந்தது. அன்றுகாலை வத்திக்கானிலுள்ள சிஸ்ரைன்சிற்றாலயத்திலே, 1946-ம் ஆண்டு பாப்பரசரால் கருதினால்பதவிக்குயர்த்தப் பெற்றவர்களாய் றோமாபுரியில் சஞ்சரித்துவருகின்ற 32 கருதினால்மார்களிலும் அதிககாலங்கண்டவரான கருதினால் அலோய்ஸி மாசெல்லா ஆண்டவர் நிறைவேற்றிய பெரிய பாடற்பூசைக்குப் பரிசுத்தபிதாவே தலைமைவகித்தார். பாப்பரசரின் இராசபரிவாரத்தினர், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், சந்நியாசசபைகளின் பிரதிநிதிகள், பரிசுத்த ஸ்தானத்தினிடமாய் இருந்துவருகின்ற பிறநாடுகளின் ஸ்தானீகர்கள், இராசீயப் பிரதிநிதிகளுடன் றோமாபுரியில் வதியும் கருதினால்மார்சகலரும் அச்சிற்றாலயத்திலே அவ்வேளை பிரசன்னமாயிருந்தார்கள். சென்றவருடமும், அதற்குமுந்தியவருடமும் ஏற்பட்ட சுகத்தாழ்வானது திருமுடிசூடிய வருடாந்த தினவிழாக் கொண்டாட்டங்களில் பாப்பரசர் சமுகமளியாவண்ணம் தடுத்துவிடலாயிற்று. தம்மைப்பீடித்த அபாயகரமான நோயிலிருந்து இன்னுமே பூரணமாகக் குணமடையாதபோதிலும் அவர் நற்சுகத்துடன் இருந்துவரக் காணப்படுகிறாரெனத் தற்போது சொல்லப்படுகிறது.

### சூசையப்பரின் திருசேத்திரம்

அர்ச். சூசையப்பர்பேரால் உலகின் மகாப்பெரிய திருசேத்திரமாய்க் கனடாதேச மொண்றியல்நகரிலுள்ள அவரின்சிற்றாலயமானது இம்மாதம் 19-ந் திகதியாகிய அவருடையதிருநாளன்று அந்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் லெஜர் ஆண்டவராலே ஓர்சிறிய பஸிலிக்கா — அதாவது சிறியமகாலயமாக அர்ப்பணஞ்செய்யப்பட்டிருக்கிறது. கனடாவின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பருக்குத் தோத்திரமாக இந்தவருடத்தை அத்தேச அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் நேர்ந்திருக்கிறார்கள். பரமபதமடைந்த அந்திரேபிறதரால் இந்தசிற்றாலயம் இற்றைக்கு 50வருடங்களின் முன் அடியிடப்பட்டது. இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கான ஆரம்பநடவடிக்கைகள் ஏலவே தானே எடுக்கப்பட்டுள்ளன. வருடந்தோறும் ஏறக்குறைய 30 லட்சம் யாத்திரிகர்கள் இத்திருசேத்திரத்தைத் தரிசித்துவருகிறார்கள். அநேகஅற்புதங்கள் இங்கே நடைபெற்றுவருகின்றன.

### லிவர்ப்பூல்நகர் ஆசனக்கோவில்

றோமாபுரி, சம்பேதுருவானவர் மகாலயத்துக்குப்பின் உலகில் மகாப்பிரமாண்டமானதாய், மிகச்சிறந்த வேலைப்பாடுடையதாய் இங்கிலாந்திலே லிவர்ப்பூல் நகரில் கிறீஸ்து இராசாபேரால் ஆசனக் கோவில்ஒன்றைக் கட்டியெழுப்புவதற்குத் திட்டஞ்செய்து இற்றைக்கு 25 வருடங்களின்முன் அத்திவாரக்கல் நாட்டப்படலாயிற்று. இது 53 பலிபீடங்களையும், 10,000மக்களைக் கொள்ளக்கூடிய இடவிசாலத்தையுமுடையதாய்க் கட்டப்படவிருந்தது. குறைந்தபட்சம் ஓர்அம்சத்தில் சம்பேதுருவானவர் மகாலயத்தையுமே இது மேற்கொள்ளக்கூடியது. அதாவது, இதன் 'டோம்' [illegible] மச்சுமாடம் [illegible]யது. நிலத்திலிருந்து வில்மச்சுமாடத்து மேற்சிலுவையின் உச்சிவரையிலே இதன்கட்டடமானது ரிறவல்கார் சதுக்கத்திலுள்ள நெல்சன்தம்பத்திலும் இரண்டரைமடங்குக்கு மேற்பட்டஉயரமுடையது. ஆனால், பலகாரணங்களையுமிட்டு இந்தப் புதிய ஆசனக்கோவிலை முந்திய திட்டத்தின் அளவில் சிறியதாயும், வேலைப்பாடு குறைந்ததாயும் கட்டுவதென்று தற்போது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1930-ம் ஆண்டு இதுநிர்மாணிக்கப்பட்டபோது இதனைக் கட்டிமுடிக்க இடப்பட்ட செலவு மதிப்பு 30 லட்சம் பவுண். ஆனால், இன்றையமதிப்பு அதைப்போல் ஒன்பதுமடங்கு, அதாவது 2 கோடியே 70 லட்சம்பவுணாகும்.

### விலக்கப்பட்ட குருமார்

மேல்சிலேசியாவிலே போலிஷ் கம்யூனிஸ்த அதிகாரிகள் வண. பிரான்ஸ் யோசெவ் பியேறஸ்கா, வண. ஜொஹான்னெஸ் டெல்லர் எனும் குருப்பிரசாதிகள் இருவரையும் ஹின்டென்பேர்க்நகரிலுள்ள அவர்களின் விசாரணைப்பங்குகளிலிருந்து அகற்றிவிட்டிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் பரிசுத்தஸ்தானத்துடன் தொடர்பற்ற "சுதந்திரபோலிஷ்தேசீய கிறீஸ்தசபை"யில் சேரமறுத்தும், வத்திக்கானுடன் கொண்டுள்ளதொடர்பை ஒழித்துவிட வேண்டுமென்று தங்களுக்குக் கூறப்பட்ட ஆலோசனையை நிராகரித்தும் விட்டார்கள். இவர்களில்முந்தியவர் கிறாக்கோ நகர குருவானவர்ஒருவர் உதவியமனையில சஞ்சரித்துவருகின்றார். ஆனால், இவர் கோவில் அலுவல்களில் தலையிடப்படாதென விலக்கப்பட்டிருக்கிறார்.

### பிரான்சிய கத்தோலிக்க பாடசாலைகள்

பிரான்சிலுள்ள கத்தோலிக்கபாடசாலைப் பிள்ளைகளுக்குமே உதவிப்பணம் அளிக்கும் சட்டத்தைப் பிரான்சிய பாராளுமன்றம் அங்கீகரித்திருக்கிறது. இந்தத்தீர்மானம் நெப்போலியன்காலத்தில் அரசாங்கமும், திருச்சபையும் வேறுவேறாகப் பிரிக்கப்பட்டதுமுதல் வேதவிரோதிகளுக்கும், திருச்சபை ஆதரவாளருக்குமிடையே நெடுங்காலமாக இருந்துவந்த வாக்குவாதத்திற்கு ஓர்முடிவு கண்டிருக்கிறது. மேலும் பாடசாலைப்பிள்ளைகளுக்குப் பால் உதவும் விஷயமாய்க் கத்தோலிக்க பாடசாலைப்பிள்ளைகள் அரசாங்கத்தாலே பாரகண்டிதஞ்செய்யப் பட்டிருந்தார்கள். தற்போது இவர்களுக்குமே பாலுக்கென்று உதவிப்பணம் அளிக்க அரசாங்கம் உடன்பட்டிருக்கிறது.

### 56 சீன வேதசாட்சிகள்

சீனதேச ஹோப்பே மாகாணத்தைச்சேர்ந்த சீயென்ஹிசியென்நகரிலே 1900-ம் ஆண்டு பொக்ஸர்களால் கொலையுண்ட நான்குமிஷனரிய குருமாரும், சீன ஆடவர்களும், பெண்மணிகளுமான 52 கத்தோலிக்கரும் வருகிற பாஸ்குஞாயிறன்று, அல்லது இஸ்பிரீத்துசாந்துதிருநாளன்று முத்திப்பேறுபெற்ற பட்டம அருளப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. திருச்சடங்காசாரமுறைகளின் திருச்சங்ககூட்டம்ஒன்று சென்றமாத இறுதியிலே பரிசுத்தபாப்பரசரின் தலைமையில்நடந்து அதிலே முன்சொன்ன 56 பேருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளும்விஷயமாய்க் கடைசித்தீர்மானம்எடுக்கப்படலாயிற்று.

### சர்வதேச சற்பிரசாதமகாநாடு

பிறேசில்நாட்டின் தலைப்பட்டணமாகிய றையோ டி ஜனேய்றோநகரிலே வருகிறஆடிமாதம் 17-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டிற்கான ஆயத்தங்கள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. அம்மகாநாட்டில் பிரயோகிப்பதற்கென 100 றாத்தலுக்குமேல் நிறைகொண்டதாய்ச் செய்யப்படுகின்ற பிரமாண்டமான கதிர்ப்பாத்திரத்தை மிகவிலையேறப்பெற்ற ஆயிரத்துக்குமேற்பட்ட இரத்தினக்கற்கள் அலங்கரித்துக்கொண்டிருக்கும். இந்தக்கதிர்ப்பாத்திரம் பிறேசிலிய பொற்கொல்லர்களால் தற்போது செய்யப்பட்டுவருகிறது. நியெற்றோய் எனுமிடத்திலிருந்து தற்போது சித்தஞ்செய்யப்பட்டுவரும் மகாநாட்டின் மிகப்பரந்த மைதானத்தைநோக்கிக் குடாக்கடலினூடாக வள்ளங்களில் நடந்தேறவிருக்கும் திவ்விய சற்பிரசாத மகாசுற்றுப்பிரகாரமும் இது உபயோகிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஒன்றாகும். உலகமுழுவதிலுமிருந்து பத்து லட்சம்பேருக்குமேற்பட்ட யாத்திரிகர்கள் இம்மகாநாட்டுக்குச் சமுகமளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பாப்பரசரின் பிரதிநிதியாகக் கருதினால் மாசெல்லா ஆண்டவர் தெரியப்பெற்றிருக்கின்றார். இவருடன் மற்றும்பதினைந்து கருதினால்மார் சமுகமாகவிருக்கின்றனர். முக்கியதிருவைபவம் மகாநாட்டுமைதானத்தில் நடைபெறும். இந்தமைதானத்திற்கென்று குடாக்கடலின்ஒருபகுதி நகரஅதிகாரிகளால் மண்போட்டுநிரப்பிச் சித்தஞ்செய்யப்படுகின்றது. மிகப்பரந்த இந்தமைதானம் இருபதுலட்சம் மக்களை அடக்கக்கூடியது. மகாநாட்டின்போது லத்தீன் திருச்சடங்குமுறையை அனுசாரத்தில் கொண்டிராதவர்களாய்ப் பிறேசில்நாட்டில் வசிக்கின்ற பெருந்தொகையான கத்தோலிக்கமக்களுக்கென்று கீழைத்தேச திருச்சடங்காசாரமுறையிலே திவ்வியபூசைகள்நிறைவேறும். திவ்வியபூசைகளின்போது பாடுவதற்கென்று ஒரு லட்சம்பேரைக்கெண்ட பாடகர்குழாம் பயிற்சியடைந்துவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பங்குனிமாதம்

போதுக்கருத்து: பரிசுத்தபாப்பரசரின் கருத்துகளுக்காக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து: பாகிஸ்தானில் திருச்சபைக்காக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
பங்குனி மாதம் 24-ந் திகதி

## தேவ அனுக்கிரகம்

"ஆண்டவரே! நீர் எங்கள் பாவங்களைப் பாராட்டுவீராகில் உமக்குமுன்பாக நிர்வாகம்பண்ணுகிறவன் ஆர்?" என்று தாவீதென்னும் தீர்க்கதரிசி பேரொலியிட்டுக்கூறினார். ஆம், மட்டில்லாத கருணா சமுத்திரமாகியதேவன் தமது அன்பென்னும் திருக்கரத்தினால் நம்மைத் தாங்கிக் கொள்ளாமல், நாம் பாவஞ்செய்த முதற்சணத்திற்றானே நம்மைக்கைநெகிழ்ந்து விடுவாரானால் நாம் நித்தியசாபத்துக்குள்ளாய் நிர்ப்பாக்கியராய்ப் போய்விடுவோமன்றோ! நாம் சர்வேசுரனின் திருக்கரத்தினால் உருவான சிருஷ்டிகளாகக் கொள்ள, அவராலேயே இயங்கி அவரிலேயே சீவிக்கவேண்டியவர்களாய் இருக்கின்றோம். ஆகையால், அவருடைய உதவி நமக்கு இடைவிடாமல் வேண்டும். அதனைநாம் இடைவிடாமல் கேட்கவேண்டும்.

நமது இரட்சகர் மனிதனாகிய முறையில் தமது பரமபிதாவை நோக்கி அடிக்கடி பிரார்த்தனை செய்துவந்தார். தேவவரப்பிரசாத சம்பூரணியாகிய பரமநாயகியும், இஷ்டப்பிரசாதத்தில் உறுதிப்பட்ட அப்போஸ்தலரும் அவர் பாவனையாக ஓயாது செபித்து வந்தார்கள். இவ்விதமே தேவகற்பனைகளில் வழுவாமல்ஒழுகும் ஒருநீதிமானுக்குத் தேவஅனுக்கிரகம் வேண்டியிருக்கையில் தினந்தோறும் ஒருமுறையல்ல, பலமுறைகடவுளுக்குப் பொருந்தாத தவறுகள் புரிகின்றநமக்கு அவரது பராமரிக்கையும், அனுக்கிரகமும் ஏராளமாய் வேண்டுமென்று சொல்லவும்வேண்டுமா? அர்ச். சின்னப்பர் உரைத்தவண்ணம், தேவஉதவி இல்லாமல் யேசு என்னும் திருநாமத்தைமுதலாய் உச்சரிக்க நம்மால் இயலாதிருக்கையில், தேவ அனுக்கிரகத்தைக்கேட்க வாய்திறப்பதற்குத் தானும் தேவனே துணைபுரியவேண்டுமன்றோ! இதனைமுன்னிட்டே திருச்சபையும் நாளாந்தம் செபித்துவரும் சங்கீதமாலையின் முகனைதோறும் "சர்வேசுரா எனக்குத்துணையாக எழுந்தருளும். கர்த்தாவே உமது திருநாமத்தை வாழ்த்த என்நாவை அசைத்தருளும்" என்று சொல்லி வேண்டிக்கொள்ளுகிறது.

ஆண்டவரின் அருட்பிரசாத உதவியினாலேயே அர்ச்சியசிஷ்டர்கள் அர்ச்சியசிஷ்டர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் தமது மட்டில் நடந்துகொண்ட பிரமாணிக்கத்துக்குச் சம்பாவனையாக அவர்களை மேன்மேலும் மகிமைப்படுத்தும் பொருட்டே நாம் அவர்களின் சலுகையைத் தேடவேண்டுமென்று சர்வேசுரன் சித்தமாயிருக்கிறார். ஆயினும் அவருடைய அனுக்கிரகமில்லாமல் — அவருடையகிருபையை இரந்துகொள்ளாமல் அர்ச்சியசிஷ்டர்களின் சலுகையை நாம் தேடவொண்ணாது என்பதற்கு அறிகுறியாகவே, திருச்சபை அவர்களைநோக்கிச் செய்யும் பிரார்த்தனைகளில் "சுவாமி கிருபையாயிரும் ..............." எனமன்றாடி அவற்றைத் தொடக்குகின்றது. இதுஏகமும், திரித்துவமுமாயிருக்கிற சர்வேசுரன் நம்மைப்படைத்ததும், நமக்காக மனுஷனாகிப் பாடுபட்டு நம்மை இரட்சித்ததும், நம்மைப்பரிபாலிப்பதுமாகிய அன்புததும்பும் தேவ தயையின் செயல்களை நினைவுகூரச்செய்து நமது பிரார்த்தனையைச் சித்தியாக்க ஏதுவாகும்.

---

## குவாலாலம்பூர் புதிய மேற்றிராணியார்

மலாய்நாட்டைச்சேர்ந்த சிங்கப்பூர்—மலாக்கா அதிமேற்றிராசனத்திலே நவமாகவகுக்கப்பட்டுள்ள குவாலாலம்பூர்மேற்றிராசனத்தின் முதல்மேற்றிராணியாராக யாழ்ப்பாணத் தமிழ்மகன்ஒருவர் தெரியப்பெற்றிருக்கிறார் என்னும் சுபசெய்தியைஅறிந்து பெருமகிழ்ச்சி எய்தலானோம். மலாக்காமேற்றிராசனம் இற்றைக்கு ஆறு மாதங்களின்முன் சிங்கப்பூர்—மலாக்கா அதிமேற்றிராசனமாயிற்று. மலாக்காமேற்றிராணியாராய் இருந்துவந்த மகாவந். மைக்கேல் ஒல்கோமென்டி ஆண்டவர் இந்தஅதிமேற்றிராசனத்தின் முதல்அதிமேற்றிராணியாராக நியமனஞ் செய்யப்பெற்றார்.

அங்கு சமீபத்திலே குவாலாலம்பூர் மேற்றிராசனமென்றும், பீனாங்மேற்றிராசனமென்றும் இருபுதியமேற்றிராசனங்கள் வகுக்கப்படலாயின. இவ்விரண்டிற்கும் ஆசியசுதேசிகளான இருவரே முதல்மேற்றிராணியாராக—அதாவது குவாலாலம்பூர் மேற்றிராணியாராக யாழ்ப்பாணத் தமிழ்மகனாகிய மகாவண. தொமினிக் வேந்தர்கோன் சுவாமியவர்களும், பீனாங்கின் மேற்றிராணியாராக ஓர் சீனமகனாகிய மகாவண. பிரான்சீஸ் சான் சுவாமியவர்களும்—தெரியப்பெற்றிருப்பதாக இம்மாதம் 13-ந் திகதியன்று வத்திக்கான் வானொலி அறிவித்தது. இது பிந்தஇம்மாதம் 20-ந்திகதியன்று அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்படலாயிற்று.

குவாலாலம்பூரின் முதல்மேற்றிராணியாரான மகாவண. தொமினிக் வேந்தர்கோன் சுவாமியவர்கள் யாழ்ப்பாணத்திலே 1909-ம் ஆண்டு பிறந்தார். இவர் மாதகல், ஸ்ரீ அந்தோனிப்பிள்ளை [illegible] விதானையாரின் [illegible] திரு. மாட்டின் வேந்தர்கோன் அவர்களினதும், சம்பத்திரிசியார் கல்லூரியின் பிரபல தலைமையாசிரியராய் விளங்கியிருந்த ஸ்ரீ சந்தியாப்பிள்ளை ஏபிரகாம்மாஸ்றர் அவர்களின் புதல்வியான திருமதி. ஜெட்றூட் அவர்களினதும் புதல்வர். யாழ்ப்பாணக் கச்சேரியிலே உதவிப்பிஸ்காலான திரு. எஸ். எம். ஜே. லூயிஸ் அவர்களின் பாரியார் திருமதி. றெஜினா அவர்களும், கொழும்பிலே அரசாங்க கணக்குப்பரிசோதனைக் காரியாலயத்தில் உத்தியோகம் வகித்திருக்கும் திரு. ஏ. யோசெவ் அவர்களின் பாரியார் திருமதி. டெய்சி அவர்களும் இவரின் சகோதரிகளாவர். வண. எஸ். பி. அல்பிறெட் சுவாமியவர்கள் இவருடைய மைத்துனர்.

புதியமேற்றிராணியார் பாலியராயிருந்தபோது சிலகாலம் சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்விபயின்றார். பின்னர் சிங்கப்பூர்சென்று அங்குள்ள அர்ச். பிரான்சீஸின் சின்னக் குருமடத்திற்சேர்ந்து படித்ததன்மேல் பீனாங்கிலுள்ள "கொலிஜ் ஜெனறல்" என அறியப்படுகின்ற பெரிய குருமடத்தில் சேர்ந்து வேதசாஸ்திரங்கள் ஆதியனகற்று 1934-ம் ஆண்டு குருப்பட்டம்பெற்றபின் சிறம்பான், கெடா, சுங்கேபட்டாணி, ஜொகூர்பாறு, தெலுக்கான்சன் ஆதியாம் விசாரணைப்பங்குகளிலே பதினாறுவருடகாலம் பெரும்பாலும் கத்தோலிக்க தமிழ்மக்களிடையே குருத்துவ திருத்தொண்டாற்றிக் கடைசியாகச் சென்ற 1951-ம் ஆண்டு தற்போதைய அர்ச். அந்தோனியார்கோவில் விசாரணைப்பங்குக்குருவராக நியமனம் பெற்றார். கோலாலம்பூரிலே புக்கிற்நானஸ் எனுமிடத்தில் நவமாகக் கட்டப்பெற்றுள்ளதும், அதிகம்தகுதிவாய்ந்ததுமான அர்ச். அருளப்பர்ஆலயமே இவரின் ஆசனக்கோவிலாய் இருந்துவரும். புதியமேற்றிராணியாரின் ஞானஆளுகை சிறந்தோங்க இறைவன் திருவருள் பாலிப்பாராக.

---

## இயக்கத்தை எதிர்த்ததற்காக

போலாந்திலே வத்திக்கானை எதிர்த்துக் கம்யூனிஸ்தர்கள் நடத்திவரும் இயக்கத்தை எதிர்த்ததற்காகச் சிலேசியாவைச்சேர்ந்த அநேககன்னியாஸ்திரிமார் கட்டாயதொழில், அல்லது தண்டனைமுகாங்களில் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனரெனப் போலாந்தின் சமயகருமங்கள்பற்றிய கம்யூனிஸ்த காரியாலயத்தின் தலைவரான ஜான் இசிடோர்சிக்என்பவர் பிறெஸ்லோநகரிலே பிரசித்தமாகத் தெரிவித்திருக்கின்றார். ஹின்டென்பேர்க், றரிபோர், கியூஸ்ராட்ற் நகர்களைச்சேர்ந்த கன்னியாஸ்திரிமார் தங்கள்மடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுக் கம்யூனிஸ்த கண்காணிப்பிலுள்ள வயல்கள், அல்லது அலுவலகத்திரிகளில் வேலைசெய்யும்படி விடப்பட்டிருக்கின்றனர்.



## சதாசகாயமாதா கோணம்

"எங்கள் இல்லத்தின் செல்வ இராக்கினி"

அதிஅன்புமிக்க சதாசகாயமாதாவே! நீர்எனக்கு அடைந்துதந்த நன்மைகளுக்காக எப்படிநன்றித்துதிகூறுவதெனத் தெரியாது தயங்குகிறேன்.

ஒருவருடத்துக்குமுன்பு நீரேதஞ்சமென உம்மண்டை ஓடிவந்தேன். அப்போது என்னைப்போல நிர்ப்பாக்கியமானஒருத்தி இல்லையென்றே சொல்லலாம். என்மனோபீடையும், சஞ்சலமும் சொல்லுந்தரமல்ல. ஓயாத வியாதிக்கிரையாய் இருந்தமையால் என் வீட்டையே விட்டுவிலக வேண்டியதாயிற்று. எனது இரத்தஉறவினர் எல்லோரும் இத்தீவுவிட்டு ஆஸ்திரேலியதேசம் சென்றுவிட்டமையால் நாம் என்மாமன் மாமியாரோடு இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மாதங்கள் செல்லச்செல்ல எங்கள் கதி அதோகதிபோலத் தென்பட்டது. நாம்செல்லும் பாதையில் வெளிச்சம் என்பதே இல்லாதிருந்தது. என்றாலும் நான்உம்மில் வைத்த நம்பிக்கை சற்றேனும் குறையவேயில்லை. வசதிவாய்க்கும் போதெல்லாம் உம்முடைய திருச்சந்நிதானத்துக்கு வந்தேன். என்கணவன் எடுத்தபரீட்சையில் அரங்கேறவேண்டுமென்று கெஞ்சிக்கேட்டேன். அதுவும் நமக்குக் கொடுத்துவைக்கவில்லை. நாம்இருபேரும் மிகவுஞ் சஞ்சலங்கொண்டோம். செய்வது இன்னதெனத்தெரியாது திகைத்தோம்.

இவ்வித அந்தரநிலைபரத்தில் நாமும் ஆஸ்திரேலியாவுக்கே சென்றுவிடுதல நலமாகும்என்று எண்ணினோம். ஆனால், அவ்விடம்செல்வதற்கு நம்மிடமுள்ளபணம் போதாதிருந்தது. அருப்புத்துருப்பாகக்கப்பற்துணடுக்குமாத்திரம் காணக்கூடியதாகவிருந்தது. இதற்கு வேண்டிய உதவிசெய்ய வேண்டுமென்றும் உம்மிடங்கேட்டேன்.

இவ்விதநிலைமையில் எனதுகணவன் ஒருஉயர்ந்தஉத்தியோகத்துக்கு மனுப்பண்ணியிருந்தார். அப்பதவிக்கு அநேகர் போட்டியிட்டனர். தாயே! உமது இரக்கத்தின்பலனாய் அந்தவேலைஎனது கணவனுக்கே கிடைத்தது. உத்தியோகங்கிடைத்ததும், ஆஸ்திரேலியாவுக்குப் போவதா விடுவதாஎன்றபிரச்சனை எழுந்தது. நான்திரும்பவும் உமக்கே மனுப்பண்ணிச் சரியானதீர்மானத்தை எங்களுக்குத் தெரிவிக்கும்படி கேட்டேன். நாங்கள் இங்கேயே தங்கியிருப்பது நலமெனத்தோன்றினால் எங்களுக்கு ஒருசொந்த வீடுவாசல் கிடைக்கப்பண்ண வேண்டுமென்றும் கேட்டேன். தாயே! உமது உதாரகுணத்தை எப்படிப்புகழுவேன்? ஒருமாதத்துக்குள் இலங்கையிற் தங்குவதென நாமிருவருந் தீர்மானித்தோம். தீர்மானித்த அன்றுபின்னேரம் அதிசயமானவிதமாகக் கிடையாதெனநாம் எண்ணியிருந்த ஒருசிறுவீடு நமக்குக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயே! நாம் விரும்பியவைகளை விரும்பியவாறு தேவனிடமிருந்து பெற்றுத்தந்ததயவுக்காக நாம் எம்சீவனுள்ளவரை உமக்கு நன்றியறிதல் உள்ளவர்களாக இருப்போம். உமது மகிமையை எப்போதும் பிரசித்தப்படுத்துவோம். எங்கள்புதிய இல்லத்தையும், நமது குடும்பசீவியத்தையும் ஆசீர்வதித்தருளும். நீரே எங்கள் இல்லத்தின் செல்வஇராக்கினிஎன்று ஏற்றுக்கொள்ளுகிறோம். எங்கள் குடும்பத்தை அரசாண்டருளும். உம்மையும், உமதுதிருக்குமாரனையும் நாங்கள் அதிகமதிகமாக நேசித்துச் சேவிக்க உதவிசெய்தருளும். சதாசகாயமாதாவே! எங்களுக்காக இப்போதும் விசேஷமாக எங்கள்மரணவேளையிலும் வேண்டிக்கொள்ளும்.

(இரத்மலானையில் வசிக்கும் என். கூல்மேயரின்பாரியார் ' நோவனைப்புதினம்'' எனும் ஆங்கிலப் பத்திரிகைக்கு எழுதியனுப்பிய நன்றித்துதியின் தமிழ்ச்சுருக்கம்.)

---

## சமாதானமாக முடிந்தது

கழுத்துறையைச் சேர்ந்த மெத்தியாலமுல்லை எனும்கிராமத்திலே கத்தோலிக்க கோவில்ஒன்றை எரியூட்டிய தன்வினைவாய் அவ்விடத்தைச்சேர்ந்த தலைமைவாய்ந்த புத்த சமயத்தினர் குழுவொன்று கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய தோமஸ் கூறேஆண்டவரைச் சென்ற மாசிமாதம் 25-ந் திகதியன்று சந்தித்துப் பின்வருமாறு அவரிடம மன்னிப்புக்கோரியது.

"பையகாலையிலே புத்தசமயத்தவர்களை மிகப்பெரும் பான்மையினராகக் கொண்ட மெத்தியாலமுல்லைப் பகுதியில் ஓர்கோவிலுக்கென்று அமைக்கப்பட்டுவந்த ஒருகட்டடமும், அதனையடுத்துத் தற்காலிகமான வழிபாட்டுத் தலமாகப் பாவிக்கப்பட்டுவந்த கிடுகால்வேய்ந்த ஓர்குடிசையும் சிலபேர்களால் எரியூட்டவும், திருச்சுரூபம் ஒன்று உடைக்கவும்படலாயின. இச்சம்பவங்களின் விளைவாக ஏற்பட்டுத் தீராதிருக்கும் கோட்டுவழக்கிலே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் புத்தகுருமாரும், சாதாரண புத்தசமயத்தவருமே. இச்சம்பவங்கள் புத்தசமயத்தவர்களுக்கும், கத்தோலிக்கருக்குமிடையே இதுகாலவரை இருந்துவந்த ஐக்கியத்துக்கு அபாயகரமான அச்சுறுத்தலாய் நெடுக இருந்துவருகின்றன. அங்குவசிப்பாருள் பெரும்பான்மையினர் இந்தத்துரதிஷ்டமான சம்பவங்களையிட்டுப் புத்த பொதுச்சனங்களின்பேரால் தங்கள் மனப்பூர்வமான வருத்தத்தைத் தெரிவித்துத் தங்கள் மத்தியிலே சமாதானம் நிலவச்செய்ய வேண்டுமென ஆசிக்கின்றனர்'' என்பதே.

அதிமேற்றிராணியார் அவர்கள்கேட்டுக்கொண்ட மன்னிப்பை அங்கீகரித்துப் பின்வருமகடிதத்தை அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்தனர். "மெத்தியாமுல்லைச் சம்பவவிஷயமாய்க் கழுத்துறையிலே தொடரப்பட்டுள்ளவழக்கு தொடர்ந்து நடைபெறுவதையிட்டுத் துவேஷஉணர்ச்சி உண்டாகும்போல் இருப்பதாலும், அவ்விடத்துத் தலைமைவாய்ந்த பேர்களின் தூதுக்கோஷ்டி ஒன்று இந்தத்துரதிஷ்டமான சம்பவத்தையிட்டுத் தங்கள்மனப்பூர்வமான வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டதாலும் இத்துவீபத்தில்வாழும்கத்தோலிக்கருக்கும், புத்தர்களுக்குமிடையே சமாதானத்தினதும், ஐக்கியத்தினதும் நலனைமுன்னிட்டு இன்னமும் தீராதிருக்கும் வழக்கு நிறுத்தப்படுவதையிட்டு நமக்கு எவ்விதமான ஆட்சேபமும் இல்லையென்று கத்தோலிக்கமக்களின்சார்பாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்'' என்பதே.

இந்தத் தூதுக்குழுவில் பிரக்கிராசியாரும், நொத்தாரிசுமான திரு. பி. எவ். ஏ. குணதிலக, எம். பி. ஈ., திரு. டபிள்யு.எவ். விக்கிரமசிங்க, ஜே. பி., திரு. டி. பி. வீரக்கூன், இளைப்பாறிய விதானைஆராய்ச்சி, திரு. ஈ. டி. எஸ். ஜயசிங்க, கிராமச்சங்க தலைவர், திரு. ஜிம்மி ஜயவர்த்தனஎனும் புத்த பிரமுகர்கள் அடங்கியிருந்தார்கள்.

அற்றேணி-ஜெனறல் அவர்களின் உத்தரவின்பேரிலே வழக்குக்கைவிடப் பட்டிருக்கிறது.

---

## கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும்

அனுராதபுரம், அர்ச். சூசையப்பர் கல்லூரி சென்ற 18-ந்திகதி வெள்ளிக்கிழமையைப் பரிசளிப்புவிழாத் தினமாகவும், மறுநாள் 19-ந்திகதி சனிக்கிழமையைக் கல்லூரித் தினமாகவும் தொடர்ந்து மிகஆடம்பரமாகக் கொண்டாடியது. 18-ந் திகதியன்று மாலை 6 மணிக்கு வடமத்தியமாகாண அரசாங்கதலைவர் தலைமையிலே பரிசளிப்பு விழா ஆரம்பமாயது. கல்லூரி விளையாட்டுமைதானத்திலே இதற்கென்று அழகுறஅமைக்கப்பட்டிருந்த மண்டப முன்பாகப் பலவிடங்களிலுமிருந்து பெருந்திரளான பெருமக்கள் வந்து திரண்டிருந்தார்கள்.

கல்லூரித்தலைவர் வண. எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ், பி. ஏ. சுவாமியவர்கள் படித்துக்காட்டிய வருடாந்தஅறிக்கையுடன் விழாஆரம்பமாயது. அவ்வறிக்கையிலே "நம் இலங்கை மக்களின் எதிர்காலம் சிறப்படைய வேண்டுமாயின் ஆங்கிலமும், சுவபாஷையும் சரிசரியாக இடம்பெற வேண்டும்; நாட்டிலுள்ள இயற்கையானமூலப்பொருள்களின் பாவனையை விருத்திசெய்யக்கூடிய நடைமுறைக்கல்வி அருளப்பட வேண்டு''மெனக் காரணங்கள், உதாரணங்களுடன் அவர்எடுத்துக்கூறினார். தாவரசாஸ்திரம், கமத்தொழில் முதலாம் பாடங்களுக்குத் தாம்பிரத்தியேக சலுகை காட்டுவதாக அவர் கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது நிகழ்ச்சியாக, கல்வியிலும், பிறவற்றிலும் திறமைகாட்டிய மாணவருக்கும், கட்சிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. அடுத்தபடியாகப் பிரதம விருந்தினரான மாகாண அதிபரவர்கள்எழுந்து கடந்த50 ஆண்டுகளாகக் கல்லூரி இம்மாகாணமக்களுக்குச்செய்துவந்துள்ள அருஞ்சேவைகளையும், தற்போதைய கல்லூரிஅதிபரின் காரியதிறமைகளையும் பாராட்டிப்பேசினார். தொடர்ந்து "யூலியஸ் சீசர்'', "விதி'', "தோழன்''ஆகிய சிறுநாடகங்கள் முறையே ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய முப்பாஷைகளிலும் சிறப்பாக நடிக்கப்பெற்று மக்களின் பாராட்டுகளைப் பெற்றன. இடையிடையே கன்னியர்மடச் சிறுமிகளால் அளிக்கப்பட்ட சிறுசிறுநடனங்கள் கண்கவர்காட்சிகளாக இருந்தன பிற்பகல் 9மணிவரை நிகழ்ச்சிகள் நடைபெற்றும் மக்கள் களைப்படையாது தங்கள் ரசிக்குந்தன்மையைத் தங்களது முகமலர்ச்சியாலும், கரகோஷங்களாலும் எடுத்துக்காட்டியவண்ணம் இருந்தார்கள். மாகாணத்திலுள்ள பிரதமபடப்பிடிப்பாளர்சிலர் சிறந்தபலகாட்சிகளைப் படம்பிடித்தார்கள்.

19-ந்திகதியன்று கல்லூரியின்பாதுகாவலராம் சூசைமாமுனிவரின் சுபதினமாகும். ஆராதனையுடன் அன்று காலை முடிபாக, மாலை 4-30மணிக்குக் கல்லூரித்தலைவராலே மாணவர்களுக்கு ஓர்சிறந்த தோட்டவிருந்து அளிக்கப்பட்டது. தொடர்ந்து ஒவ்வோர்வகுப்பிலுமிருந்து பயிற்றப்பட்ட மாணவர்களால் வகுப்புநாடகப்போட்டி நடாத்தப்பட்டது. மாலை 8-30மணிவரை கல்லூரிமாணவர்களும், மற்றேனையோரும் சலியாது காட்சிகளை ரசித்தவண்ணமிருந்தனர். மாகாணப்பிரதம வித்தியாதிகாரி வண கட்டலைக்குரவர், கன்னியர்மடத்தாயார் முதலியோரும் இச்சுபதினங்களைச் சிறப்பித்தனர். விசேஷமாக வ[illegible]ம, இம்[illegible] சுவாமியவர்களு[illegible]ளும் புரிந்தசேவையும், கல்லூரிஅதிபரின் மிக்கானதிறமையும் போற்றற்பாலனவாகும். — நிருபர்

---

## அர்ச்சியசிஷ்ட...? புனித, தூய...?

கோயில்களில் கிறீஸ்துவர்களின் பகிரங்க வணக்கத்திற்குத் தகுதியுடையவர்களெனத் திருச்சபைகருதும் மோட்சவாசிகளுக்கு 'அர்ச்சியசிஷ்டர்' என்றபட்டம் அளிக்கப்படுகிறது. அர்ச்சியசிஷ்டர்களைப் பற்றிப் பேசுகையில் சிலர் 'அர்ச்சியசிஷ்ட' என்ற பதத்தை நிராகரித்துவிட்டுப் 'புனித', 'தூய' என்ற பதங்களைப் பிரயோகித்து வருகின்றனர். புனித, தூய என்றபதங்கள் இதுவரை கிறீஸ்துவத் தமிழ் மக்கள் உபயோகித்துவந்த 'அர்ச்சியசிஷ்ட' என்ற வார்த்தையைப்போல அர்த்தபுஷ்டிவாய்ந்தவையல்ல. 'சிஷ்ட' என்றபதம் பெரியோர், உத்தமர்என்று பொருள்படும். 'அர்ச்சிய' என்னுஞ்சொல் வணக்கத்திற்குத் தகுதிஉடைய என்று பொருள்படும். 'அர்ச்சிய' 'அர்ச்சித' என்றசொற்கள் இன்றோ, நேற்றோ, கடந்தவருடமோ தமிழில்வந்து கலந்தவையல்ல. தேவாரம், பிரபோத சந்திரோதயம், அஷ்டாதசரகஸ்யம், சைவசமயநெறி, கோயிலொழுகு முதலிய பழையநூல்களிலேயே இப்பதங்களை வழங்கியுள்ளனர்.

நம்மால் வணக்கப்படத் தக்கவர்களென்று திருச்சபை பிரகடனப்படுத்திக் கனம்பண்ணிய பரலோகவாசிகளைக் குறிப்பதற்குச் சுத்தமானஎன்று பொருள்படும் 'புனித', 'தூய' என்பவற்றைவிட 'அர்ச்சியசிஷ்ட' என்ற பதமே சாலச்சிறந்ததாகும். பண்டையகாலந்துவக்கிப் பழக்கத்திலிருந்த வார்த்தையை, அதைவிடப் பொருத்தமான பதமிருந்தாலன்றி நிராகரிப்பது ஏற்கத்தக்கதல்ல.

தமிழ் இன்றும் வழக்கில் இருந்துவருவது. வளருந்தன்மையுடையது. இதர மொழிகளிலிருந்து தன்தேவைக்கும், பண்பிற்குந் தக்கவைகளை ஏற்றுத்தனதாக்கிக்கொள்ளும் உரிமையை அதற்கு மறுத்தல் நீதியன்று. இதர பாஷைகளிலிருந்து புகுந்து தமிழில் இடம்பெற்றுள்ள மொழிகளையெல்லாம் பிரஷ்டம் செய்வது தமிழ் மொழிக்குப் பரிகரிக்க முடியாத நஷ்டமாகும்.

"சர்வவியாபி''

---

### நன்றியறிந்த தோத்திரம்

1953-ம்வருஷம் பங்குனிமாதம் அர்ச். சூசையப்பரிடம் எங்கள் ஏழைக்குடும்பத்திற்கு ஒருவீடுவாங்கஉதவிசெய்யவேண்டுமென்று ஒருகடிதம்எழுதி அர்ச். சூசையப்பர்படத்தில்வைத்துத் தினமும் நாங்கள மன்றுடிவந்தோம். எங்கள் நல்ல தந்தை எங்கள் மன்றாட்டுக்கு இரங்கி 1954-ம்வருஷம் பங்குனிமாதம நாங்கள் கேட்டபிரகாரம் வீடுவாங்க உதவிசெய்தார். திருக்குடும்பத்திற்கு எங்கள் நன்றியறிதலைச் சமர்ப்பித்துக் கொள்ளுகிறோம். மேலும், நாங்கள் கேட்கிற காரியங்கள் அனுகூலமாகும்படியாக அர்ச். சூசையப்பரிடம் மன்றாடுகிறோம்.

கொழும்பு ஓர் பக்தன்



### சாதனங்களும் அனுசாரங்களும்

சென்றஇதழில் முதல்அனுசாரமாகிய தினசரி காணிக்கையைப்பற்றி அறிந்தோம். இம்முறை இரண்டாவது அனுசாரமாகிய திவ்வியபலிபூசையையும், பரிகாரதன்மையையும் ஆராய்வோம்.

தினசரி காணிக்கையானது திவ்விய நற்கருணைப் பலியோடு இணைக்கப்படுவதினுல் உத்தமமாகிறது. அது திவ்வியபலிபூசையில் கிறீஸ்துநாதரோடு அர்ச்சிக்கப்பட்டு, அவருடைய அளவில்லாத பலனில் பங்குபெறுகின்றது. அதனுற்றுன் அங்கத்தவர்கள் தங்கள் தினசரி காணிக்கையைத் திவ்விய பூசைப்பலியோடு இணைக்கவேண்டும். இப்பூசைப்பலி நமதுநித்தியபிதாவிற்கு நாம்புரிந்த துரோகத்திற்குப் பரிகாரஞ் செய்யவும், யேசுவின் திருஇருதயத்திற்குச் செய்யப்படும் நிந்தைஅவமானங்களுக்குப் பரிகாரஞ் செய்யவும் சிறந்த சாதனமாய் இருக்கிறது. ஆகையால், அங்கத்தவர்கள் தங்களுடையவும், பிறருடையவும் பாவங்களுக்குப் பரிகாரம்செய்யவும், அவருடையஇரக்கத்தை இரந்துமன்றுடவும் மாதம் ஒருமுறையென்கிலும் திவ்விய நற்கருணை உட்கொள்வார்களாக. மேலும் வாரத்தில் எத்தனைதடவை கூடுமோ, அத்தனைதடவையும் திவ்விய பூசைப்பலியில் கலந்து திவ்வியநற்கருணைப்பந்தியிலும் பங்குபற்றுவார்களாக.

---

ST. PATRICK'S COLLEGE

**PASSION PLAY**

Saturday, April 2nd, 7-30 p. m. for Children.

Sunday, April 3rd, 7-30 p. m. for the Public.

* * *

**சம்பத்திரிசியார் கல்லூரி**

**திருப்பாடுகளின் காட்சி**

பிள்ளைகளுக்கு

சித்திரை 2-ந்திகதி சனிக்கிழமைமாலை 7-30 மணி தொடக்கம்.

பொது சனங்களுக்கு

சித்திரை 3-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7-30 மணி தொடக்கம்

---

## பெற்றோர்தின விழா

திரிகோணமலை, அர்ச். சூசையப்பர் தமிழ்ப்பாடசாலைப் பெற்றோர்தினவிழா சென்ற 19-3-55 சனிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை 6-30 மணிக்கு மாணவர் வழமைபோலத திவ்வியபூசைகண்டனர். பி. ப. 6 மணிக்குப் பகுதிமுகாமைக்காரர் வண. ஜெறோம் டிசாசுவாமியவர்கள் தலைமையிலே மாணவர்கள் காலட்சேபம், சென்மபூமிஎன்னும் சிறுநாடகம், கோலாட்டம், செம்புநடனம், யாழ்நூல் அரங்கேற்றம் ஆதியவற்றைத் திறம்படநடத்திப் பெற்றோரை மகிழ்வுறச்செய்தனர். பின்னர் "தாய்ப்பாஷை'' என்னும் விஷயம்பற்றி ஆங்கிலத்தில் உயர்வகுப்பு மாணவரொருவர் உபந்நியாசம்செய்தார். அவற்றைஆயிரவருக்கு மேற்பட்டோர் பங்குபற்றி இரசித்தனர். ஆசிரியரின் நன்றியுரையுடன் 9-15 மணியளவில் விழாநிறைவெய்தியது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருப்பலி

### சுவிசேஷம்

நமோ நமோ மாதாஎன்ற தேசிய கீதம், அல்லது ஆங்கில தேசியகீதம் பாடும்போது நாம் எழுந்து சாவதானமாய் நிற்கிறோம். உங்கள் பாடசாலை விழாக்களின் முடிவில் இதைக்கண்டிருப்பீர்கள். இது எமது தேசத்திற்கு நாம் காட்டும் மரியாதை அல்லது வணக்கம்.

அதே காரணத்துக்காகத்தான் குருவானவர் சுவிசேஷம் வாசிக்கும்பொழுது நாம் எழுந்துநிற்கிறோம் சுவிசேஷம் எங்கள் ஆண்டவரின் சீவியசரித்திரம். அவருடைய நடத்தையையும், போதனையையும் அது நமக்கு எடுத்துக் கூறுகிறது. சுவிசேஷம் வாசிக்கும்பொழுது மரியாதைக்காக எழுந்து நிற்கிறோம்.

சுவிசேஷத்தை வாசிக்குமுன் குருவானவர் பூசைப்புத்தகத்தில், அது இருக்குமிடத்தில் சிலுவையடையாளம் வரைவார். அதன்பின் தமதுநெற்றியிலும், வாயிலும், நெஞ்சிலும் மூன்று சிலுவைகள் வரைவார்.

நாமும் குருவானவருடன் சேர்ந்து அப்படிச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது எங்கள் நினைவிலும், பேச்சிலும், இருதயத்திலும் யேசு இருக்கவேண்டும்என்றதை நினைத்துக் கொள்ளவேண்டும்.

வேதாகமத்தில்ஒருபகுதி யேசுவின் சீவியத்தைக்கூறும் சுவிசேஷம். சுவிசேஷங்கள் நான்கு. ஒன்றைஎழுதினவர் சீஷரான மத்தேயு. சம்பேதுருவின் சீஷனான அர்ச். மார்க்கு இரண்டாம் சுவிசேஷத்தை எழுதினார். சம்பாவிலுவின்தோழனான அர்ச். லூக்கா மூன்றாஞ் சுவிசேஷத்தை எழுதினார். நாலாவதைச் சீஷனான அருளப்பர் எழுதினார்.

எங்கள் ஆண்டவரின் சீவியசரித்திரத்தை வாசித்து அறியக்கூடியதாயிருப்பது எவ்வளவுபாக்கியம்! யேசுவே உலகத்தின் ஒளி. அந்தஒளியின் பிரகாசத்தில் நடந்தால் மோட்சத்திற்குச் செல்லும் பாதையைவிட்டு விலகமாட்டோம். ஒவ்வொரு அடிக்கும் அதிக தெளிவு உண்டாகும். அதைப்பின் பற்றுவது அவசியம்.

சுவிசேஷம் வாசித்து முடிந்தபின் குருவானவர் பூசைப் புத்தகத்தை முத்தமிடுவார். மரித்தோர் பூசையில் இப்படிச் செய்வதில்லை. இப்படிமுத்தமிடுவதும் தேவவாக்கியத்துக்குமகிமை செய்யும்படிதான். வேதாகமம் தேவ வாக்கியம் அல்லவா? அதிலும் யேசுவின் சீவியத்தை விபரிக்கும் சுவிசேஷம் எவ்வளவு சிறப்பானது!

சுவிசேஷம் வாசித்து முடியும்பொழுது பூசைப்பரிசாரகர் லத்தீன்மொழியில், "கிறீஸ்துவே உமக்குப் புகழ்ச்சியாகுக" என்பார்கள். நாங்கள் எங்கள்மனதில் பக்தியாய் அப்படிச்சொல்லலாம்; "கிறீஸ்துவே புகழ்ச்சியும், மகிமையும் உமக்கு உண்டாவதாக."

ஞாயிற்றுக்கிழமையில் சுவிசேஷத்தைச் சங்கிஸ்தாம் தமிழில் வாசிப்பார். சனங்கள் எழுந்து நிற்பார்கள். அதன்பின் குருவானவர் பிரசங்கஞ்சொல்லுவார்.

---

## பொன் மொழிகள்

1. கோழைகள் தோல்வியை ஒப்புக்கொள்வார்கள்; வீரரோ மறுபடியும் முயற்சி செய்வார்கள்.

2. உன்கோபம் உன்னுடனேயே இருக்கட்டும்; வேறொருவரும் அதை விரும்பமாட்டார்கள்,

3. நல்லெண்ணத்துடன் கையிடும் கருமங்களுக்கு முட்டுக்கட்டையாயிருப்பது தோல்விவரும் என்றபயம். தோல்விவரும் என்றபயம் எங்கள் முயற்சியை அழித்துவிடும்.



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

துன்பம் துணையைத் தேடும் என்று நாடோடியாய்ச் சொல்வார்கள். எமது துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒருவரைத் தேடுவது சுலபம் அல்ல. அப்படிப் பங்கிட்டுக் கொள்ளக்கூடிய ஒருவர் உண்டு. அவர்தான் திவ்வியயேசு.

நாம் அழும்பொழுது யேசுவும் எம்முடன் அழுகிறார். அவர் எங்கள் கவலைகளை விளங்கிக் கொள்ளக் கூடியவர் மாத்திரமல்ல, அவைகளைத் தம்முடையவைகள் ஆக்கிக் கொள்ளவும் கூடியவர். நாம் சில முறைகளில் எங்கள் கவலைகளை நெடுங்காலமாக, நெடுந் தூரத்திற்கு, அவரைப்பற்றிய எண்ணமே இல்லாமல் சுமந்து விடுகிறோம்.

எமது சீவியத்தின் சில தருணங்களில் முதுகைத் தட்டிக் கொடுக்கவும், எமக்கு இன்முகங் காட்டிச் சந்தோஷம் ஊட்டவும் ஒருநண்பன் தேவை. அப்படிப்பட்ட ஒருவர் உண்டு. அவர் சற்பிரசாதத்தில் இருக்கும் யேசுநாதர். அவரிடம் போய்ப் பாருங்கள். உங்கள் உள்ளத்தின் அடித்தளத்தில் அவர் பேசுகிறதை அறிவீர்கள். "அருள் என்னப்பா நடந்தது? ஏன் மனஞ் சுருண்டுபோய் இருக்கிறாய்? கவலை வேண்டாம். நாம் உன்னுடன் இருக்கிறோம்."

எங்கள் வாழ்விலும், தாழ்விலும் பங்கெடுத்து எம்முடன் கூட இருப்பவர் எமது அன்பர் யேசு. சுபம்.

உங்கள் அன்புள்ள
அண்ணா.

---

## சேற்றிற்கிடந்த செபமாலை

அன்று மார்கழிமாதத்தில் ஓர்நாள். வீதியோரங்கள் சேறும், சகதியுமாய் இருந்தன. மணி 10 இருக்கும். 13 வயது மதிக்கக்கூடிய ஓர்மாணவன் அந்த வீதிவழியாய் நடந்துகொண்டிருந்தான். அப்போது எதிர்முகமாக வந்த மோட்டார்ரதங்கள் இரண்டிற்கு வழிவிலகிக் கொடுக்குமாறு அவன் வீதியின் ஓரத்திற்குச் சென்றான். சென்றதும் அவன் கால்களில் ஏதோ தட்டுப்படவே அதைக் கீழே கூர்ந்து பார்த்தான். அவன் ஓர் கத்தோலிக்கன். ஆகவே, அது ஓர்செபமாலைஎன அறிந்துகொண்டான். ஆனால், சேற்றுள் புதைந்திருந்த படியால் அதை எடுக்க அவனுக்குக் கைவரவில்லை.

அதனால் அதை எடாமலே அவன் அவ்விடத்தைவிட்டகன்று சொற்பதூரம் சென்றுவிட்டான். ஆனால், அடுத்த கணம் "ஆ! மாதாவே! தாயே!" என்ற குரலுடன் வீதியில் விழுந்தான். விழுந்தபின்னரே தான்ஓர் மோட்டார் சைக்கிளால் முட்டுண்டதாக அறிந்ததும் அவன் மனம் குமுறியது. "நீ அப்போது அந்தச் செபமாலையை எடுக்க அருவருத்தாய்; இப்போது மாதாவா? தாயா?" என்ற உணர்ச்சி பிறந்தது. உடனே எழுந்தான். சிரசில்உண்டான சிறுகாயத்துடன் வந்த வழியே திரும்பினான். எங்கே? ஆம், அங்குதான். அச்செபமாலை கிடந்த இடத்திற்குத்தான். அதைச் சேர்ந்ததும் நடுக்கத்துடன் செபமாலையைக் கையில் எடுத்தான். "ஆ, உன்னையா எடுக்காமல் சென்றேன்; மாதாவின் மாலையானஉன்னையா கைவிட்டுச்சென்றேன்" என்று சொல்லிக் கொண்டே அதனைப் பலதரம் முத்தமிட்டான். பின்னர் வீட்டுக்குச் சென்றான். நடந்ததைத் தாயிடம் கூறினான். சிலதினங்களில் அவன் காயம் குணமாயிற்று.

எ. எம். ஜே. ஈ.
சில்லையூர்

---

## செம்மண் தீவு

செம்மண்தீவு என்னும் குக்கிராமம் மன்னார் – மதவாச்சித் தெருவிலே, மன்னாரில் இருந்து 13 மைல் தூரத்தில் இருக்கின்றது. அதில் இருந்து ஓர் குறுக்குத் தெரு மாவிலங்கேணிக் கூடாக அளவக்கை வழியாக நானாட்டானுக்குச் செல்லுகிறது. இக்கிராமம் முன்னே பற்றை பறுகு நிறைந்த ஓர்சிறு காடாக இருந்தது. சமீபத்தில் பெருமகன் சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் நெல் குத்தும் யந்திரம் இங்கு அமைக்கப்பட்டதும் நாகரீகம் மிகுந்த கிராமங்களில் ஒன்றாக வளர்கின்றது. இது செம்மண் நிறைந்த தரையைக் கொண்டுள்ளது. அதனால், இதற்குச் செம்மண்தீவு என்னும் காரணப்பெயர் வாலாயிற்று. இதன் ஓர்பக்கத்திலே கட்டுக்கரைத் தடாகம் இருக்கின்றது. ஏனைய பக்கங்களிலே அந்தத் தடாகத்தின் நீர்வாய்க்கால்கள் செல்லுகின்றன. இதற்கு அண்மையில் நீர்ப்பாசன உத்தியோகஸ்தர்களின் காரியாலயங்களும், வேறு பல கந்தோர்களும், சிற்சிலகடைகளும் இருந்துவருகின்றன. இங்கு நெல்குத்தும் யந்திரத்துடன் தொடர்பு பட்டு மரம் அரியும் கருவிகளும், வேறுபல யந்திரங்களும் அமைந்துள்ளன. இவற்றால் பல பாகங்களிலுமிருந்து கிராம மக்கள் இங்குவந்து கூடிக்குழுமித் தத்தம் வேலைகளைப் பூர்த்தி செய்துசெல்ல வசதி ஏற்பட்டிருக்கிறது. இன்னும் கட்டுக்கரைத் தடாகம் பக்கத்தில் இருப்பதால் நீர்வளம் செறிந்ததாயும், அதனால் மக்கள் குடியேறிப் பயிர்பச்சைகள்செய்து பிழைக்க ஏற்றதாயும் இருப்பதால் இந்தக்கிராமம் வருகாலத்தில் அதிக புழக்கமுடையதாய் வருமெனக் காத்திருக்கலாம்.

இதில் முதன் முதலாக வந்துகுடியேறிய பெருமகனின் பேருதவியால் இன்னும் பல குடிகள் இங்கு வந்து குடியேறிக்கொண்டிருக்கின்றன. இதன் நிலவளம் இயற்கையில் செழிப்புடையதாய் இருப்பதால் பலரையும் கவரக் கூடியதாகும். இது போன்ற வேறுபல இடங்களும் மாதோட்டத்தில் ஆங்காங்கு காணப்படுகின்றன. அந்த இடங்களையும் தனவந்தர் தெரிந்து குடியேறிப் பலவித தொழிற் சாலைகளை நிறுவினால் மாதோட்டம் இன்னும் மாண்புற்று இலங்கும் என்க.

A. E. P.

---

## பாடசாலைக்கோணம்

போளவத்தை, 8-10-54.

அன்பார்ந்த ஞானத்தந்தையே!

தமக்குத் துரோகம்செய்யக் கூடியவர்களாகிய மனுஷரைக்கொண்ட உலகம்ஒன்றைஉண்டாக்குவதிலும்பார்க்க, சுயாதீனமுள்ளவர்களானாலும் தமக்கு எப்போதும் ஊழியம்பணணக் கூடியவர்களாகிய மனுஷரைக்கொண்ட உலகமொன்றை ஏன் சர்வேசுரன் உண்டுபண்ணியிருக்க முடியாது?

ஜி. இசபெல்லா

விடை: நன்றாய் உண்டாக்கியிருக்கலாம். ஆனால், அதன்பின்னும் நீர் கேட்டுக்கொண்ட வினாவைப்போன்ற இன்னும்பதினாயிரம் வினாக்களைக்கேட்பதற்கு இடமிருந்திருக்கும். சர்வேசுரன் இந்தஉலகை மாத்திரமல்ல, ஒரு உலகைத்தானும் உண்டாக்காமல் விட்டிருக்கலாம். ஏன் உண்டாக்கினீர் என்றுகேட்பது, சித்திரக்காரன்ஒருவன் ஏன் தனதுசித்திரத்தை வரைந்தான்என்று கேட்பதைஒக்கும். அவன் தன்சித்திரத்தைப் பல நியாயங்களைக் கொண்டு வரைந்திருக்கக்கூடும். பணம் சேகரிப்பதற்காக, புகழ்பெறுவதற்காக, வீட்டை அலங்கரிப்பதற்காக ......... ஆனால், சர்வேசுரனும் ஒருநியாயத்தையிட்டு உலகமனுஷரை உண்டுபண்ணியிருக்கிறார். தமது மகிமைக்காகவும், எமது மோட்சபாக்கியத்திற்காகவுமே. இவ்வுலகில் நாம் தம்மைத்தேடினோமோ, அல்லது இல்லையோஎன்று நாமே எமக்கு மறுமொழிசொல்லக் கூடியதாய் இருக்கும்படியாகவே சுயாதீனம் உள்ளவர்களாய் நம்மை இப் பூவுலகில் அவர்படைத்தார். இது புத்திக்கு விரோதமானதல்ல.

ஏன் அப்படி? வேறுவிதமா யிருந்தாலென்ன? என்றுகேட்பது, நீர் ஏன் இந்தவினாவைக் கேட்கிறீர்? வேறு வினாவைக் கேட்டாலென்ன? என்றது போலிருக்கும்.

[நாம்பெற்றுள்ள இன்னும் அநேக வினாக்களுக்கு இடமாற்றங்காரணமாய் விடைகொடுக்கத் தாமதித்ததையிட்டு வருந்துகின்றோம். ஏனையவிடைகள் தொடரும்.]

Sacred Heart College,
Karaveddy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## " மகா புண்யவானே "

(வித்வான் எஸ். தோமஸ்உடையார்)

மதிமலர்ப் பூங்கொடி யோனே—மிக்க
மாதவஞ் சேர்பெரு மானே
துதிவளர் யேசுவின் தந்தை—எனச்
சொல்லும் மகா புண்யவானே
பதும மலர்க்கரந் தனிலே—திவ்ய
பாலனை யெடுத்தரு கினிலே
நிதமும் வளர்த்திட்ட தாதா—அருள்
நிறையும் வரப்பிர சாதா

●

மாமுனிவன் மொழி போலே—உந்தன்
மலர்க்கரத் தேந்திய கோலே
தேன் மலர் பூத்ததினுலே—மணஞ்
செய்து வைத்தார் புவிமேலே
தாய்மரி யாமெங்கள் அன்னை—முனம்
தன்மண வாளனு யுன்னைப்
பூமியில் கொண்டதெவ் வரமோ—உந்தன்
புண்ணியஞ் சொல்லவும் தரமோ

●

வறுமையில் வாடிய மணியே—தூய
வாழ்வுகொள் வோர்க்கொரு அணியே
சிறுமையில் லாத்தெய்வ கனியே—பணி
செய்யும் தவம்பெற்ற முனியே!
குறுமைசேர் வெம்பகை மாற—இந்தக்
குவலயத் தோர்கடைத் தேற
இருமை யறஙகளும் சேரத்—திகழ்
இல்லறத் தோர்க்கொரு வேந்தே!

●

அறியாப் பருவத்தில் தானே—இந்த
அம்புவி யைவெறுத் தோனே
நெறியாய் நடந்தில கோர்க்கு—மறை
நீதியெ லாம்புகன் றேனே
சரியாய் மறைப்பொருள் தெரியேன்—ஒரு
சாத்திர மும்படித் தறியேன்
தரியா மனத்துயர் தீராய்—சூசை
தந்தையே வந்தெனைக் காராய்

●

கற்றிடு மாணவர்க் கொளியே!—சிறு
கைத்தொழி லாளர்க்கு வழியே
வற்கடந் தீர்மழைத் துளியே—புவி
வாழ்தவத் தோர்க்கிரு விழியே
சற்றும் புகலிட மின்றி—உடல்
தளர்ந்திட வேபலங் குன்றி
அற்றவர் தங்கட்கு வென்றி—தரும்
அடைக்கலம் யாருனை யன்றி

●

உள்ள முடைந்துயிர் வாடி—நெஞ்சம்
உருகிக் குறுகித் தள்ளாடி [டை
மெள்ளத் துயர்வந்து மூடித்—தொண்
விக்கி யிருமல் மேலாடி
கள்ளக் கருவிழி பஞ்சாய்—ஒரு
கையமு தம்பெரு நஞ்சாய்
வல்லுயிர் போகுமுன் நீயே—தந்தை
வந்தெனக் கேயருள் வாயே!

●

சார்ந்தவ ரும்எனை வெறுத்தார்—சுற்றத்
தாரும் உதவிட மறுத்தார்
மாந்தரெல் லாம்அரு வருத்தார்—சதி
மார்க்கத்தி லேதள்ளி ஒறுத்தார்
ஏந்துங் கொடிமலர்க் கரனே—இனி
யாருமில் லையெனக் கரணே
சேர்ந்த இருபதச் சரணே—அருள்
செய்திடு வாய்முனி வரனே

●

பூவில் வருகின்ற தொல்லை—இனிப்
போதும் அதற்குண்டோ எல்லை
தாவிப் படரொண்ணு முல்லை—யெனத்
தளர்ந்தேன் வேறு கதியில்லை
சாகும் வரையிலும் உறுத்து—வந்து
சார்ந்த துயரெல்லாம் பொறுத்து
தேவி னடிபுக்க புனிதா—எனைத்
தேற்றுவ துன்னக் கரிதா!

●

சிறகை யிழந்தபுட் குலம்போல்—செல்
லும்
திசையறி யாமரக் கலம்போல் [லும்
உரிமையி லார்வாழும் நிலம்போல்—கா
ஒளியை யிழந்தகட் புலம்போல்
வரவர மெலிந்ததென் னுள்ளம்—ஆறாய்
வடியுதே கண்ணில்நீர் வெள்ளம்
ஒறிது மிலமனக் கள்ளம்—எனைச்
சேர்த்தருள் வாயுன தில்லம்

●

வண்டு செந்தேன் மறந்தாலும்—மீன்கள்
வாருதி யைமறந் தாலும்
கொண்டலைப் பயிர்மறந்தாலும்—பெற்ற
குழந்தையைத் தாய்மறந் தாலும்
என்று முனைமறவேன் மெய்யா—சற்றும்
ஏதமில் லாமனத் தய்யா
இன்றெனை யாண்டுகொள் ஐயா—இணை
யாருமில்லாக் கொடைக் கையா!

வே. குரலொளி

# தட்டிக்கழித்த தபசுகாலம்

( ஸ்ரீ திண்ணைக்காவல் — ஞானதூதன் )

எங்கே தபசுகாலம் வந்துவிடப் போகிறதோஎன்று ஓரேபயம் எனக்கு. அது வந்துவிட்டால் ஒரு ஓய்வுஒழிவு இல்லாமல் செபம், தபம், ஒருசந்தி, சுத்தபோசனம், சிலுவைப்பாதை, வியாகுலபிரசங்கம் என்று ஏகப்பட்ட 'புரோக்கிராம்' இருக்கும். எங்கள் வீட்டைப் பொறுத்தவரையில் அது மிகக் கண்டிப்பாக நடைமுறைக்கு வரும். எங்கள் தபசுகால 'புரோக்கிராம்' — அதாவது அட்டவணை வருமாறு :

காலையில் என்ன அலுப்பிருந்தாலும் 5-30 மணிப் பூசைக்குப் போய்விட வேண்டும். பிறகு எனது முயற்சியைத் பார்த்துவிட்டுப் 12-30 மணிக்குப் திரும்பிவந்தால் சாப்பாடானதும் பத்துநிமிஷ ஞானவாசினை. அதை என்னைத்தனியே வாசிக்கவிட்டுவிட்டால் ஏதாவது ஒருநாவலைப் படித்துத் தீர்த்துவிடலாம். ஆனால், என்மனைவியே சுவிசேஷத்தைத் தூக்கிவைத்துக்கொண்டு அங்கும்இங்கும் கண்ணோட்டம்விட்டபடி நடுவில் உட்கார்ந்து வாசிக்கும்போது என்னசாக்குச்சொன்னாலும் நான் தப்பமுடியாது. ஐந்துமணிக்கு நான்வீட்டில்இருந்தால் கண்டிப்பாகச் சிலுவைப்பாதைக்குப் போயாகவேண்டும். இரவு வழக்கம் போல் ஜெபமாலை சாப்பிட்டதும் வியாகுலபிரசங்கம். அதை நானே சத்தமாக வாசிக்கவேண்டும். அதற்குப்பின் வீட்டில் அனுவசியமான பேச்சே இருக்கக்கூடாது. இதைப் பார்த்து நீங்கள்என்வேதானுசாரத்தை மெச்சிக்கொள்ளலாம். இன்னும் வெள்ளிக்கிழமை ஒருசந்தி வந்துவிட்டாலோ வீட்டிலுள்ள அத்தனைபேரும் — 13 வயதுச் சந்திரன்உட்பட—ஒருவேளைச்சாப்பாட்டோடு நிறுத்திக் கொள்ள வேண்டியதுதான். காலையில்கொஞ்சம் பழைய நீராகாரம். இரவு ஏதோ அரைச்சாப்பாடு. எனக்கு இந்தஅட்டவணை ஏனோ சில காலமாகப் பிடிக்கவில்லை. இதை ஒரு தடவையாவது தட்டிக்கழித்து விடுவது என்று தீர்மானித்தேன். அதற்காகப் பங்குச்சுவாமியார்முதல் என்மனைவி வரையில் பலரைச் சரிக்கட்டவேண்டியிருந்தது.

டக்ரிடம்சென்று அவரை ஒருவாறு வசப்படுத்தி, உபவாசமிருந்தால் உடம்புக்குஆகாது; குறைந்தபட்சம் ஆறுமாதம் பூரண ஓய்வெடுக்காவிட்டால் இரத்தஅமுக்கம ஏற்படும்; அதிகாலைத்தூக்கம் கலையக்கூடாது; வெயிலேஉதவாது; முழங்காற்படியிடுவது இன்னும் ஒருவருடகாலத்திற்கு ஆகாது; மாமிசம் நன்றாய்ச் சாப்பிட வேண்டும் என்றெல்லாம்எழுதி வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். என் சகதர்மிணியிடம் அதைக் காட்டினதும் அவள் பயந்தேவிட்டாள். இவ்வளவு எளிதாக அவளைச் செயித்துவிட்டது பற்றி எனக்குப் பரமதிருப்திதான்.

ஆனால், இந்தச்சந்தோஷம் நீடிக்கவில்லை. பெரியபெரிய பொய்யாகச் சொன்னதுமட்டுமல்ல, தபசுகாலத்தையே அலட்சியம்பண்ணுவதும் தவறுதவறுஎன்று என் மனச்சாட்சி விடாமல் 'லெக்சர்'பண்ணிற்று. என்ன செய்வதென்றுதெரியாது மூளைக்குள் விரலைவிட்டுக் குடைந்தேன். சட்டென்று அருமையான ஓர் யோசனைஉதித்தது.

அந்தஅருமையானயோசனைப்படியே என்மனைவியிடஞ்சென்று, டக்றர் என்னை நன்றாகப் பரிசோதிக்கவில்லை என்றுகூறி மழுப்பிவிட்டு, இரண்டு மாதகாலம் வெளியூர்சென்று வராவிட்டால் எனக்கு எல்லாவியாதியும் ஒன்றாகவந்துவிடும்; உடனேகிளம்பு என்றேன். என்ன[illegible] தபசு காலம் வருகிறதே என்றாள். [illegible] டத்தோடு அவளைச் சமாளித்தபிறகு வீட்டிலுள்ளஎல்லோரும் கிளம்பிவிட்டோம்.

நாங்கள் வீவிற்குவந்தஊரில் யுத்தத்தால்மக்கள் மிகக்கஷ்டப்பட்ட காரணமாக ஒருசந்தி, சுத்தபோசனகடமைகள் தற்சமயம் இல்லைஎன்ற உத்தரவு இருந்தது. இதைக்கருதித்தான் நான் அந்தஊருக்கு வரத்திட்டமிட்டேன். மேலும்அங்கே சுவாமியார்கிடையாது. மாதத்துக்கு ஒருபூசைக்காக ஏழுமைலுக் கப்பாலிருந்து வந்துபோவார். நம்முடைய திட்டமெல்லாம் நூற்றுக்குநூறு சரி; தபசுகாலஉபத்திரவம் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாமென்றுஎண்ணிச் சந்தோஷித்தேன். கடைசியாகத் தபசுகாலமும் வந்தது. அதுவந்ததுகூடத் தெரியாமல் நாங்கள் குஷியாகஇருந்தோம். ஒருவாரம், இரண்டுவாரம் ஆயிற்று. என் மனைவி தானாகவே தபசுகாலக் கடமைகளை அனுசரிக்கஆரம்பித்தாள்.

ஐய! இது தபசுகாலமாகவா இந்த ஊர் இருக்கிறது; ஒருசந்தி, சிலுவைப்பாதை ஒன்றுமில்லையேஎன்று அலுத்துக்கொண்டாள். எனக்கு அது வேடிக்கையாக இருந்தது. ஆனால், நாலாம்வாரம் வருவதற்குள் எனது உல்லாசமெல்லாம் உறங்கஆரம்பித்துவிட்டது. குருத்துஞாயிறு சீக்கிரமே வரும். வழக்கமாக என்ன மனநிறைவோடு குருத்தஏந்தி வீதிகளைச் சுற்றி வருவோம்! கோவிலுக்குள்சிலர் ஒளிந்துகொண்டு பாடுவதும், குருவானவர் வாசல்கதவைத் தட்டுவதும், ஏககாலத்தில் எல்லாக்கதவுகளும திறந்துகொள்வதும் என்ஞாபகத்துக்கு வந்தன. எனவே, குருத்துஞாயிறுப் பூசைக்கு எப்படியாவது போய்விடுவதென்று ஏழுமைல்தூரமும் வண்டிகட்டிப் புறப்பட்டோம். ஆயினும் இந்த விழாவில் உனக்குப்பங்கு ஏது என்று என்மனம்கேட்டது. பெரியவியாழன், வெள்ளி, சனி மூன்றுநாட்களும் ஒருவிதசோகை பிடித்ததுபோல் ஆகிவிட்டது எனக்கு. ஒன்றுமே ஓடவில்லை. இராவபகல்ஆராதனை, கால்கழுவும் சடங்கு, பெரியசிலுவைப்பாதை இவையொன்றும்இல்லாதது எனக்கு மிகவும் வேதனையாகஇருந்தது. தபசுகாலத்திற்குத் தப்பிவந்ததுபோக, அதைத்தேடிக்கொண்டு போகவேண்டும்போல் தோன்றிற்று. பெரியசனிக்கிழமையன்று நான்மட்டும் நடந்து போய்ப் புதுத்தீயும், தீர்த்தமும் எடுத்துவந்தேன். இதெல்லாம் எடுத்துக்கொண்டுபோக உனக்கென்ன உரிமை? என்று அவைகள்என்னைக் கேட்பதுபோலிருந்தது. உயிர்த்ததிருநாள் வந்தது. அன்றுநாங்கள் இருந்த கிராமத்திலேயே பூசை நடந்தது. எல்லோரும் பூசைக்குப்போனோம். உயிர்த்தஆண்டவர் சுரூபத்தைப்பார்க்கவே எனக்குப் பயமாகஇருந்தது. அவர்காயங்களிலிருந்து இரத்தம்வடிவதுபோல் காணப்பட்டது.

எல்லார்முகத்திலும் மகிழ்ச்சி. என் மனைவியும், பிள்ளைகளும்கூடச் சந்தோஷமாக இருந்தார்கள். எனக்கு மட்டும் ஓரேபீதி. நீ துரோகி! ஆண்டவருடன் துன்பப்படாதவன் அவருடன் எப்படி உயிர்த்தெழுதலின் சந்தோஷத்தை அனுபவிக்கமுடியும்? என்று யாரோஎன்னைக் கேட்டார்கள். ஐயோ! ஏன்தான் இங்குவந்தோம்! தபசுகாலத்தைத் தட்டிக்கழிக்கவந்து பெரியகுழப்பத்தில் மாட்டிக்கொண்டுவிட்டோமேஎன்று கவலைப்பட்டேன். ஒருபெரியகழுகு என்னைத் தன்சிறகால் ஓங்கி அடித்து: ஓடு; எழுந்துபோ ஊருக்கு; கடமைகளைத் தவறவிடாதேஎன்று அலறியது. அடிபொறுக்கமுடியாமல் கழுகின்சிறகை எட்டிப்பிடித்தேன்.

## தமிழில் மொழிபெயருங்கள்

1. **Why do we wear sandals ?**
   (i) For Greatness
   (ii) For Beauty
   (iii) For the protection of feet.
2. **Why do Girls wear flowers ?**
   (i) For Beauty
   (ii) As Flowers are cheap
   (iii) As all do not have flower gardens.
3. **If my dress got fire ?**
   (i) I will shout out.
   (ii) I will roll on the ground till the fire is put out
   (iii) I will run for help.

அ. அல்போன்ஸ் சிராய்வா,
நல்லாயன் பாடசாலை, மன்னார்.

## விடை காணுங்கள்

அல்போன்ஸ், றிச்சேட், கிறிஸ்தோப்பர் ஆகிய மூவரும் மடுவுக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் யாரையும் காணவில்லை மடுமாதாவைத் தரிசித்து விட்டு, ஆர் எங்களுக்கு உதவியென்று பெருமூச்சுடன் கோயிலைவிட்டு வெளியே வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் கையில் கொஞ்சம் கொஞ்சம் மா வைத்திருந்தார்கள். வெளியே வந்ததும் ஒரு பாட்டியைக் கண்டார்கள். அவர்களைப் பசி வாட்டியது. அதனால் பாட்டியிடம் சென்று தாங்கள் வைத்திருந்த மாவைக் கொடுத்து அப்பம் சுட்டுத் தரும்படி கேட்டார்கள்.

கேட்டுவிட்டுப் பாட்டியின் வீட்டுத் திண்ணையில் நித்திரையாகிவிட்டார்கள். பாட்டி அப்பங்களைச் சுட்டுக் கொண்டு வந்து அவர்கள் நித்திரைசெய்த இடத்தில் வைத்துவிட்டுப் போனாள்.

அல்போன்ஸ் எழுந்து பார்த்தான். அப்பங்கள் இருப்பதைக் கண்டு அவைகளைத் தன்கிட்ட எடுத்து, இருந்த அப்பங்களை மூன்றாய்ப் பிரித்தபோது, ஒன்று மீதியாய் இருந்தது. தனது ஒருபங்கையும் சாப்பிட்டு மிஞ்சிய ஒரு அப்பத்தையும் சாப்பிட்டான்.

இப்படியே றிச்சேட்டும் எழுந்து, இருந்த அப்பங்களை மூன்று பங்குகளாகப் பிரித்தான். ஒரு அப்பம் மிஞ்சியது. தனது ஒருபங்கையும், மிஞ்சிய ஒருஅப்பத்தையும் சாப்பிட்டான். இப்படியே கிறிஸ்தோப்பரும் எழுந்து சாப்பிட்டுவிட்டுப் படுத்தான். விடிய மூவரும் எழுந்து மீதியாய் இருந்த அப்பங்களை மூன்று பங்காகப் பிரித்து மிச்சமின்றிச் சாப்பிட்டார்கள்.

1. பாட்டி சுட்ட அப்பங்கள் எத்தனை ?

2. அல்போன்ஸ் எத்தனை அப்பங்கள் சாப்பிட்டான் ?

3. கிறிஸ்தோப்பர் எத்தனை அப்பங்கள் சாப்பிட்டான் ?

4. றிச்சேட் எத்தனை அப்பங்கள் சாப்பிட்டான் ?

அ. அல்போன்ஸ் சிராய்வா,
நல்லாயன் ஆண்பாடசாலை,
மன்னார்.

கையைவிடுங்கள் — கட்டிலில் படுத்திருந்தநீங்கள் கீழேவிழுந்து கிடக்கிறீர்கள் — ஏன்கிடந்து உழறுகிறீர்கள் — எழுந்திருங்கள் என்றாள் என்மனைவி. அப்பா! நல்லவேளை, எல்லாம் கனவோடு நின்றுவிட்டது—என்று பெருமூச்சுவிட்டேன். "எங்கே வியாகுல பிரசங்கம்? இன்னும் வாசிக்கவில்லை. மணி 9 தான் அதுக்குள்ளே என்ன உறக்கம்? — வாங்க, 6-ம் பிரசங்கத்தை வாசியுங்கள்என்றாள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றுசேர்ந்து செபிக்கும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பசெபமாலை விரும்பியநேரத்தில் செபிக்கலாம். ஆனால், இராச்சாப்பாடு முடிந்தவுடன் இதைச்செபிப்பதே உத்தமம். ஏனெனில், காலையில் பிரிந்து வெளியேசென்றவர்கள் மாலையில் — அதாவது இரவில் சாப்பாட்டிற்கு வந்து குடும்பத்தில் ஒன்றுசேர்ந்துவிடுவார்கள் அல்லவா? சாப்பாடுமுடிந்ததும் எல்லோரும் ஒன்றுகூடிச் செபமாலையில் பங்குபற்றலாம். குடும்ப தலைவனாகிய தகப்பன் செபமாலையை ஆரம்பிக்கலாம் செபத்தின் ஓர்பகுதியைச சொல்லலாம். மற்றவர்கள் மற்றப்பகுதியைச் சொல்லலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொருகாரணிக்கம் செபிக்கலாம். களைப்புவாராதபடி செபமாலையின் பின் கிருபைதயாபமந்திரம் சொல்லலாமேதவிர வேறுசெபங்கள் சொல்லக்கூடாதென்பது எங்கட்டளை. இச்செபமாலை செபிப்பதற்குப் 10 நிமிஷங்கள் போதுமானது.

ஒருகுடும்பம் செபமாலைசெபிக்கும் போது அது சர்வேசுரனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுகின்றது. முழந்தாளில்இருப்பதே தேவஆராதனையாகும். சர்வேசுரனுக்கு மாதாமூலம் செலுத்த வேண்டிய சிநேகப்புகழை இந்தஅழகான செபமாலைப்பக்தியால காட்டாவிட்டால் வேறெந்தவழியாகக் காட்டப்போகிறீர்கள்? அமிழ்தினு மினிய மழலைமொழிபேசும் மக்கள் தம்வாயால் செபமாலைச்செபங்களைச் செபிக்கக் கேட்கும் தாய்தந்தையர்களின் காதும், மனமும் எவ்வளவுஆனந்தம் அடையுமென்பதை மக்களில்லாக்குடும்பம் அறியுமா?

பக்தியோடு செபமாலைசெபிக்கும் வீடுகளில் அக்கிரமபுருஷனோ, அடக்கமில்லாத மனைவியோ இருக்கவேமுடியாது. அங்கே கடமையுணர்ந்த கணவனும், மனைவியுமிருப்பர். கட்டளைக்கமைந்த பிள்ளைகள் கனம்பண்ணி நேசிப்பர். உங்கள் குடும்பத்துக்குக் கிடைக்கும் இவ்வுத்தம உபகாரங்களுக்காகப் பத்துநிமிஷநேரம் செலவிடுவது பாரமாகுமோ யோசித்துப்பாருங்கள்? உங்கள்மத்தியில் இச்சிறந்தபக்தியை வளர்க்க நான் பரிந்துகேட்பது 10 நிமிஷமே. ஆதலால், தினந்தோறும் தவறாது 10 நிமிஷநேரம் இச்சிறந்த குடும்பசெபமாலையைச் செபித்துத் தேவதாயாரின் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் உங்கள்குடும்பங்களுக்குப் பெற்றுக்கொள்ளுங்கள்.

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்த கூட்டம் இம்மாதம் 25-ந்தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். சித்திரைமாதத்தில் சபையோர் பரிபூரணபலன்கள் அடையக்கூடியநாட்கள் பின்வருமாறு:— 4, 7, 10, 16 (2), 21, 23, 24, 28 (2), 30. இம்மாதம்16-ந்தேதி அல்லது 23-ந்தேதியில் வாக்குத்தத்தம் புதுப்பித்தால் இன்னுமோர் பரிபூரணபலன் அடையலாம். பொதுப்பாவமன்னிப்பு அடையக்கூடிய நாட்கள்:— 3, 4, 5, 6, 7, 8, 9, 10. கூட்டத்தின் பின் ஆலோசனைச்சங்கம் இருக்கும்.

A. S. FRANCIS OF MARY
for Director

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனதுமகளுக்கு ஏற்பட்ட கடுமையான உவாந்தி ஒருகிழமைக்குமேல் நீடித்துவந்ததையிட்டு நான்மிகவும் கிலேசப்பட்டுக் கடைசியாய், ஆசா. மசெனெட் ஆண்டவருடைய சலுகையைத்தேடி ஓர்நாள்இரவு அவருடைய படத்தைப் பிள்ளையின் தலைமாட்டில்வைத்தேன். ஆச்சரியவிதமாய் அடுத்தநாள் சுகக்குறி காணப்பட்டுச் சில நாட்களுள் நற்சுகம்அடைந்தாள். நேர்த்திப்படி இதனைப்பிரசுரிக்கிறேன். இந்தப் பரிசுத்தவாளனுக்குச் சீக்கிரம் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவதாக.

யாழ்ப்பாணம் ஓர் பக்தன்

## முன்னாள் கம்யூனிஸ்தர் சொல்லுகிறார்

திரு. ஹமிஷ் பிறேசர் அவர்கள் முன்னர் பிரித்தானியதேச கம்யூனிஸ்தகட்சியில் ஓர் அங்கத்தவராய் இருந்தவர். ஸ்பானிய உள்நாட்டுயுத்தம் நிகழ்ந்த காலத்திலே இரண்டுவருடகாலம் சர்வதேச கம்யூனிஸ்தபடையில் சேர்ந்திருந்தவர். ஆனால், இவர் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்தபிறகோ கம்யூனிஸ்த பிரசாரத்துக்குத் தக்கபதில் கத்தோலிக்க சமூகதத்துவமேயென்றுநியாயங்காட்டிச் சொற்பொழிவுகள், கட்டுரைகள், துண்டுப்பிரசுரங்கள்மூலம் வீரத்துவமாகப் பிரசாரஞ் செய்து வருகின்றார். “கம்யூனிஸத்தைப் போக்கடிக்கும்மாற்றுமருந்து கத்தோலிக்கரின் கையில் இருக்கிறது; அவர்கள் அதைமாத்திரம் — அதாவது பாத்திமாச் செய்தியை மாத்திரம் பிரயோகித்தாலோ! ருஷியாவின் மனந்திரும்புதல் நடைபெறக்கூடிய தொன்றாகும்; ஏனெனில், லோகாயத கம்யூனிஸத்தாலே நோய்வாய்ப்பட்டு நொந்தும், மயக்கந் தெளிந்துமுள்ள சீவியர்களும், மரிப்பவர்களுமான ஆடவர்களையும், பெண்களையும் ருஷியா அடக்கியிருக்கின்றது; ஆதலால் கம்யூனிஸ்தர்கள் மனந்திரும்புவதிலேயே பிரச்சினை தங்கியிருக்கிறது. நானும் சுவாலித்தொளிவிடும் கத்தோலிக்கதிருச்சபைக்கு மனந்திருப்பப்பட்ட ஓர்முன்னாள் கம்யூனிஸ்தனே” என்று அவர் கூறுகின்றார். நமது செபதப வேண்டுகோளுக்கு விசுவாசிகள் செவிசாய்ப்பார்களானால் உலகத்துக்குச் சமாதானம்வரும், ருஷியாமனந்திரும்புமென்று பாத்திமாவிலே பரிசுத்ததேவதாயார் வாக்களித்திருக்கின்றார் அன்றோ!

### மனந்திரும்பிய பாதிரிமார்

கல்யாணஞ் செய்தவர்களாய் மனந்திரும்பிய மூன்றுபாதிரிமார் கடந்த மூன்றுவருடங்களிலும் ஜேர்மனியிலே கத்தோலிக்கசமயமுறைப்படி குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றுள்ளனர். மற்றும் அநேகர் இவர்களைத் தொடர்ந்து குருப்பட்டம் பெறுவதற்குப் பரிசுத்த ஸ்தானத்திடமிருந்து விசேஷ இளக்காரத்தை எதிர்பார்த்திருக்கின்றனர். இவ்விதம் மனந்திரும்பிக் குருப்பட்டம் பெற்றுக்கொண்டவர்களில் ஒருவரான வண. றுடல்வ் கேத் சுவாமியார் தமது மனந்திரும்புதல்விஷயமாய் எழுதிவெளியிட்டுள்ள புத்தகம்ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். பேரான ஜேர்மன் கவிஞர்ஒருவரின் வம்சத்தில்தோன்றியஇவர் மெயின்ஸ்நகர ஸ்றோர்மேற்றிராணியாரால் தமது 71-ம் வயதைக் காணுவதற்கு முதனாளாகிய சென்ற 1952-ம ஆண்டு மார்கழிமாதம் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார். இவர்பாரியார் முன்பு கவுண்ரெஸ் புவெலோவொன் டெனெவிற்ஸ் என அறியப்பெற்றவர். நெப்போலியனுடன்போ[illegible] மாஷலின் [illegible] ரும் மனந்திரும்பியவர். தற்போது குருமாராயிருக்கும் ஏனைய மனந்திரும்பிய பாதிரிமார் இருவரிலும் ஒருவரான வண. ஒற்றோ மெல்சேர்ஸ்சுவாமியார் ஓர்குடும்பத்தினராக இருக்கின்றார். இப்படிப்பட்டவர்கள் குருப்பட்டம்பெறுமுன் பிரமச்சரியம் அனுட்டிப்பதாக வாக்களிக்க வேண்டும். வண. கேத்சுவாமியாரும், வண. மெல்சேர்ஸ் சுவாமியாரும், இவர்கள்ன்பாரியர்களும், மெல்சேர்ஸ் சுவாமியாரின் பிள்ளைகளும் மெயின்ஸ் நகரிலே ‘‘சமாதான இல்லம்” என அழைக்கப்படுகின்ற ஓர் மனையில் வசிக்கின்றார்கள். இந்தவாசஸ்தலம் கத்தோலிக்க திருச்சபையைப்பற்றிய விபரங்களை அறியவிருப்புகின்ற புரொட்டஸ்தாந்தருக்கு — விசேஷமாகப் பாதிரிமாருக்கு அவற்றைத்தெளிவிக்கும் மத்தியதானமாக இருந்துவருகிறது. வண. கேத் சுவாமியாருடையவும், அவர்பாரியாருடையவும் நெருங்கியநண்பர்கள் 150 பேர் அவர்களைப்பின்பற்றிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கின்றனர். குருப்பட்டம்பெற்றபின் வண. கேத்சுவாமியாரும், அவர் பாரியாரும் வத்திக்கான்மாளிகைசென்று பரிசுத்தபிதாவின் பிரத்தியேகபேட்டி பெற்றுக் கொண்டார்கள்.

### அவர்கள்கூறும் நியாயம்

ஆபிரிக்காவிலே உருண்டி எனும்நாடு ஐக்கியநாடுகளின் பாதுகாப்பிலுள்ளது. பெல்ஜிய அரசாங்கத்தால் பரிபாலனஞ் செய்யப்படுவது. சமீபத்திலே பெல்ஜியஅரசாங்கம் அந்நாட்டிலுள்ள அரசினர்பாடசாலைகள் சமயவிஷயமாய் நடுநிலைமை வகிக்க வேண்டுமென்றும், அதனால்அப்பாடசாலைகளில் சமயபாடம படிப்பிக்கப்படாதென்றும் ஓர்புதியசட்டத்தை ஆக்க முனைந்தது. இதையிட்டு அந்நாட்டின் மிவாமி மிவாம்புட்சாஎன்னும் ஆபிரிக்கஅரசரையும், 29 சிற்றரசர்களையும் கொண்ட உயர்சபைகூடி, அவ்விதம் நடுநிலைமை வகிப்பதற்கு மாறாகவும், அரசாங்கத்தாலே திறக்கப்படும் எந்தப்பாடசாலையும் குருமார் அல்லது கன்னியாஸ்திரிமாரை ஆசிரியர், ஆசிரியைகளாகக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்குச் சார்பாகவும் ஏகமனதாக வாக்களிக்கலாயிற்று. அவ்வேளை அவர்கள் எடுத்துக்கூறிய நியாயம் வருமாறு: “நடுநிலைமைப்பாடசாலைகளை ஸ்தாபிக்குமுன் கினியாவில்நடக்குங் கலகங்களை அரசாங்கம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். சமயத்தின் ஒத்தாசை நமதுசனங்களுக்குக் கிடையாவிடின் இராசதுரோகம், புரட்சிக்கலகம், அக்கிரமங்களுக்கு வழிதிறக்கப்படும். எங்கள்நாட்டிற்குவந்த முதல்வெள்ளைக்காரர் மிஷனரிமார்களே. அவர்களே எங்களுக்குச் சமாதானமும், சுபீட்சமும் கொண்டு வந்தார்கள்” என்பதே.

## பாடசாலைத்தின விழா

திரிகோணமலையைச் சேர்ந்த நிலாவெளி அர்ச். சூசையப்பர் பாடசாலைத்தினம் கடந்த 19-3-55 சனிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை பாடசாலை ஸ்தாபகரான வண. எஸ். அருளப்பர் சுவாமியவர்கள் பாடற்பூசை நிறைவேற்றினார். அநேகமானோர் திருவிருந்தில் பங்குபற்றினர். மாலைப்பொழுதானதும் மாமரச்சோலையிலே பிரமுகர்கள், அபிமானிகள்மத்தியிலே சின்னக்கடை, பரிசுத்த வியாகுலமாதாஆலயகட்டளைக்குரவர் வண. ஜோண் பீற்றர் சுவாமியவர்கள் தலைமையில் கொடிவணக்கம், பாடசாலைக்கீதம், உடற்பயிற்சியைத் தொடர்ந்து மாணவர் மாணவிகளின் விளையாட்டுப் போட்டி ஆரம்பமாயிற்று. இதிலே அர்ச். சூசையப்பர் இல்லம் 63புள்ளிகளும், அர்ச். அருளப்பர் இல்லம் 38 புள்ளிகளும் பெற்றமையால் அர்ச். சூசையப்பர் இல்லமே வெள்ளிக்கிண்ணம் சன்மானிக்கப்பெற்றது மாணவர் ஒருவர்எழுந்துஉடன்மாணவர், மாணவிகள்போரால்நன்றிகூறினர். தலைவர்சுவாமியவர்கள் பாடசாலையின்முன்னேற்றத்தைப் புகழ்ந்தும், மேன்மேலும் அது சிறப்புறப் பெற்றோரினதும், அபிமானிகளினதும் ஒத்துழைப்பைக் கோரியும் நின்றார். ஈற்றில், பாப்பரசர்கீதம், தேசியகீதம் என்பனவற்றோடு விழா முடிபெய்தியது. சுபம்.

எச். இம்மனுவல்

## நாநா சங்கதிகள்

● இந்தியாவிலே குடகுமந்திரிகள் சமீபத்தில் வெற்றிகரமான செயற்கை மழைப் பரிசோதனைஒன்றை நேரில் பார்த்தார்களாம். அங்கு பெள்ளிபெட்டாவில் ஓர்காப்பித்தோட்ட முதலாளியான திரு. எம். பி. டேவிஸ்என்பவர் தம்முடைய அறுபதுஏக்கர் காப்பித்தோட்டத்தில் செயற்கைமழை பெய்வித்து வெற்றிபெற்றுள்ளாரெனச் சொல்லப்படுகிறது.

● லண்டன் நகரிலே தெம்ஸ்நதிக் கரையில் 28மாடிகளைக்கொண்டவானளாவிய கட்டடம்ஒன்று ஷெல்கம்பெனியால் அமைக்கப்படவிருக்கிறது. இதுகட்டிமுடியுமிடத்து லண்டன்மாநகரில் இதுவே மிகவும்உயர்ந்தகட்டடமாயிருக்கும். 365 அடி உயரமுள்ள செண் போல் ஆலயந்தான் தற்போது அந்நகரின் மிகவுயர்ந்தகட்டடமாகும்.

● வருகிறஆடிமாதம் ஆரம்பமாகவிருக்கின்ற அமெரிக்கவரசின் புதிய அரசிறைவருடத்திலே ஆசியநாடுகளுக்கு இராணுவ, பொருளாதாரஉதவியாக 214கோடியே 5லட்சம் டலர் உதவும் திட்டம்ஒன்றை அமெரிக்க வெளிநாட்டு உதவிசம்பந்தமான நிர்வாகத்தலைவர் சென்ற18-ந்திகதி வெளியிட்டிருக்கின்றார். கம்யூனிஸ்ற் அல்லாத ஆசியநாடுகளின் பொருளாதாரநிலைமையை விருத்திசெய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

● ஸ்பானியதேச ரொலெடோ நகரிலுள்ள கார்மேல்சபை ஆச்சிரமத்தைச்சேர்ந்த ஓர்சந்நியாசரான சங். பீடேறோ லோப்பெஸ்பிறதரின் நான்கு புதல்வரும், நான்குபுதல்விகளும் குருமாரும், சந்நியாசரும், கன்னியாஸ்திரிமாருமாய் இருந்துவருகிறார்கள். இற்றைக்கு மூன்று வருடங்களின்முன் தமதுபாரியார் காலஞ்சென்றதும் இவர் அந்தஆச்சிரமத்தில் சந்நியாசியாகச் சேர்ந்துகொண்டார். ஒருபுதல்வரான வண. பபுலினோசுவாமியார் அதேசபையையே சேர்ந்தவர்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 24-1955.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org